1900
O-,192M,TM
Nov
115418

REGISTERED 1-OCT. 1900 MADRAS

பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர்றஹீம்.

இறசூல்முஹம்மது சல்லல்லாஹு அலைஹி வசல்லம்

அவர்கள் பேரில்

# திருமக்காப்பள்ளு.

இஃது

காளு தூத்துக்குடியிலிருக்கும்

மகா-ள-ள-ஸ்ரீ பாக்கர்கான் சாய்பவர்கள்

ஜேஷ்ட குமாரர்

தூத்துக்குடி டிஸ்டிரிக்கட்டு முன்சீபுக்கோர்ட்டு அமீன்

## B. ரஹீம்கான் சாய்பால்

பழைய ஏட்டுப்பிரதியைக்கொண்டு

பரிசோதித்துத்திருத்தி

பிரபந்தரூபமாகவியற்றி

ஷை ஊர்

மகா-ள-ள-ஸ்ரீ சின்னத்தம்பி மரைக்காயரவர்கள் குமாரர்

**S. K. முகியித்தீன் காதர்நெய்னா மரைக்காயர்**

அவர்கள் பொருளுதவியால்

தூத்துக்குடி

அருணோதய அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1900

கதம்பன்றேய் காமலர்த்தேனிடாய விர்சங்கனிகலந்துசேறாய்
மிதம்பரவுநன்னாட்டினாற் செயல்வாய்த்தனுதினமும்வேதந்தேர்ந்த
விதம்பலவுங் குலவுதிருமக்காவின் புகழ்விரிப்பச்சென்னைநல்லின்
னிதம்பலவுந் தேர்புலவனாழுத்திப்பாட்டியற்றியதை னொத்தவுன்னி.

நதியின்மிகு பொருணைசேனுந் திருவார்ந்த நெல்வேலி நகரில் வாழ்ந்த
மதியிசைநற்றவத்துடையோன் மன்னர்மகிழ் பாக்கற்கான் வரத்தில்வந்து
புதியவனபுருத்தலெனு நன்னூலைத்திலக்கணத்தின்போதந்தேர்ந்த
விதிபலவு மிலக்கியத்தின் நன்குணர்ந்தசெருளாளன் மிக்கோனான்
நன்னெறிக்கு நண்ணலனாத்திருத்துருணன் பலகலைதேர்நாவலன் பன்னோலனம்
மன்னெறியை கடவாத வுத்யோக மேலோர்கள் மதிக்கவல்ல
பன்னெறியிற்றேர்ந்ததிருவைராகவேங்கடாசலமென்பவனுழைாடா
மன்னுமாதங்கத்திற்றன் றாக்கையிடையினவயணியாய்க் கோர்த்து.

திருவளரு மக்திநகர் மேவுநன தனதனெனுஞ் செல்வப்வாய்ந்த
மருமலர்த்தாரணிமார்பன் முகிலிற்றின் காதர்ஷா மனைக்கமர்ந்தன்
பொருணுதவி கொண்டச்சியெயற்றியதின் பெரும்புகழைப் போற்றிமேல்லை
யருள்தருவான்பதப்பரவி யைகுரியம்பலபெருமி வாழ்கமாதோ.

வைழூர் வித்வான்

ஜோ. அ. இராமநாதபிள்ளையவர்களியற்றியன.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஆரணமதனையன்புடனுதவ வருவிறைமொழிதிகண்டிருவாய்ப்
பூரணநிகனெவர்க்குமே மேலாய்ப் புதுமையாம் பொருளினுட் பொருளாய்
வாரணோடாத்துமதிபர்கள் வணங்குவண் கழன்றுகைம்மதுனாநி
காரணச்செங்கோ லொருதனிச்செலுத்துங் கருணையன்றே மக்களமாய்.



அன்னகர்ப்பெருமையனமேன்றிங்கேர்ன்ற வமைத்தொருபிரபந் தப்பனாய்
முன்னெருபுலவனியம்பினனிவனு முதுமொழி முதன்மையோ டிருந்த
இன்னியப்பாவினியல்வகைபரிபாட்டினில் வகைத்தனாதனுஞ்
சொன்னிறையிறையாயிருந்தவைமீக்கிச் சொற்றனன் ரகுநாதன் மாதோ.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

கடவுண்மறை போற்றிடவே யவதரித்தவருட்டுதோர் கவியின்மிது
படவிபுகழ்திரு மக்காப்பள்ளொன்றை யிற்றிருத்திப் புலமைகொள் மெச்ச
படர்வரி வண்டினமுமாமலர்ச்சோலை மந்திரநகர்ப்பதியில்வாழுந்
திடமுடைய [illegible] ரகுநாதனுயச்சியற்றுஞ் செய்தான் மாதோ.

[illegible]

[illegible] பிள்ளையவர்களியற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

திருவளரு [illegible]
[illegible] மக்காப்பள்ளென் னுமைக்கும் பாவின்
பொருண்மாறச்சொன்ன [illegible] கேட்டி லேவிபரம் புலன்பெற்றும்
அருமையுறும் [illegible] தலைவருக்குமேலவரையமேமே.

வைழூர் தி. சு. சுப்பிரமணியபிள்ளை

யவர்களியற்றியன.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

[illegible]

சொல்லறிஞரெவராலுந் தொடர்புகளின் வடிவுபொருடுணிதற்கின்றி
புல்லறிஞர் பொருளினையும் பொறுமையினோர் கல்வியையும் போன்றதாகி
செல்லரியுண்டிருந்த மக்காப்பள்ளெனுமோர் முதுநூலைத் திருத்தியார்க்கு
நல்லறிஞர்பொருள்போல பயன்படுமாறளித் துயர்ந்தநலங் கொண்டானால்.

---

திருநெல்வேலி ஜில்லா ஒட்டப்பிடாரந்தாலூகா
எப்போதும்வென்றான் கிராமமுன்சிப்
இராமசுவாமி நாயக்கரவர்களியற்றியன.

அன்னாளிலோரறிஞன் றிருமக்கா முஹம்மதுபேலமைத்தான் பள்ளை
இன்னாளிற் பிழையுற்றுஞ் செல்லரித்து மிருந்ததன்னா லிசையேயுற்றுப்
பன்னாளும்புவிமீது விளங்கிடச் சீர்திருத்தினன் பாவலர்மெச்ச
தென்னாளுஞ் சிறந்தோங்கு மந்திரநகர் ரஹீம்கானென்றுசொல்வல் லோன்.

மதிதனையுமறைக் குமுகிலின்றுவெளிவந்தொளிர்தல்வாறுபோல
கதியுறவே கருவிகளைப்பண்படுத்து மியாழ்நன்று தொனித்தவாறே
புதியநூல் விதியுறவே புவிமிசைநன் னின்னாளிற் புகல்வபோல
அதிமிசையா யின்னூலைத் திருத்தினன்மா ரஹீம்கான் சாய்பதி வல்லோனே



நாத்துக்குடி.
S. நல்லபெருமாள் கவிராயரியற்றியது.
நிலைமண்டிலவாசிரியப்பா.

சீர்பெறுமக்கந் திறந்தபதிமே
லேர்பெறும்பள்ளை யியற்றினனொருவன்
பன்னாட்செலவது பலபிழையாகி
யின்னாள்வரை மறைந்திருந்ததன்னால்
திருத்தவெனப்பலர் செப்பியதாலவர்
கருத்தின்படியே கனபிழையெடுத்தோர்
பிரபந்தம்போற் பிரசுரஞ்செய்தன
னாபக்கமுறு வுறவோனின்னாட்
பொழின்மிகு நன்னகர் புதூர்ப்பதிதனிலருட்
டொழின்மிகுங்குத் துபாத்தோன்றலைப்போற்றி
கனபுகழ்கொண்ட கலம்பகமொன்றை
மனமகிழ்ந்துரைத்த மாவறிவுடையோன்
ஆரியகலைபல வறிந்தோனின்னுஞ்
சீரியசெந்தமிழ் தெளிவுறத்தேர்ந்தோன்
தீன்குலத்திலகுட் டிலகமாயுதித்தோன்
நான்குகவியு நன்குற நவில்வோன்
சத்தியவாக்கினன் சதுர்மறையுணர்ந்தோன்
புத்திசன் வியப்புற பொழிகவி முகில்போற்
றந்திரத்தோ டினியக் கவியுரைப்போன்
மந்திரநகர்தனின் மாட்சியாய்வாழ்வோன்
மா-ரஹீமிறைமென் மாருப்பத்தியன்
B ரஹீம்கானென்னும் பேர்நாவலனே.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

# திருமக்காப்பள்ளு.

நாளது தூத்துக்குடியிலிருக்கும்
மகா-ா-ா-ஸ்ரீ பாக்கர்கான் சாய்பவர்கள் ஜேஷ்ட குமாரர்
**B.** ரஹீம்கான் சாய்பாலியற்றிய

## சிறப்புப்பாயிரம்.

### தெய்வவணக்கம்

நேரிசை வெண்பா.

மதியுரவேபுன் னுமவர் மாவுள்ளத்தெண்ணங்
கதியுரவே யாற்றுங்கருணை—யதிவலிகொ
ளெம்மமலன் றண்ணருளி னீகையதிகாடினே
னிம்மலச் செய்கைக்கியான்.

### நபிநாயகவணக்கம்.

கட்டளைக்கலித்துறை

அருள்கொண்ட வன்மைநிறைந்திலங்காமெய்யறுதிமிகத்
தெருள்கொண்டமாண்புமறையுணின் சீர்த்திமையச்செய்பினனுன்
மருள்கொண்டவுள்ளமுமேற்றுவதெவ்வண மாகபியே
பொருள்கொண்ட மெய்யறிவோங்க நின்பூங்கழல்போற்றினனே.

### குருநாயகவணக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

தேனேங்க வின்னிசைக ளார்க்கும்பல கனிபுதவுஞ் சிறப்புந் தோன்றி
வானோங்கு பொழில் பகுதாதினிற்சிறக்கு முகியித்தீன் வலிகள் கோமா
னானேனக்குமோர்கள்வனறிவடைய வருளினொன் னுளத்தும் ஞானத்
தானேனக்குங் கதிபெறவே மலரடிகள் சிரமிசையான் முங்கினேனே

## அவையடக்கம்.

நிலமண்டிலவாசிரியப்பா.

குறையாக்கேள்விக் குணத்தோரெவரு
நிறையாயென்னு ளிலைப்பர்தமே
மறதியுந்தவறு மக்கட்கியல்பெ
யறிவுடையோர் பொறுத்தாள்வது கடனே.

## வரலாறு.

நேரிசையாசிரியப்பா.

உலகம்பலவு முளசராசரமு
மிலகவியற்றிய விறையருடன்னுன்
மணிசேரிலகும் மாநிலந்தன்னி
லணிசேர்மக்கா அகம்மதுமேற்றிரு
மக்காப்பள்ளியு மாசிபந்த
மக்காலந்தனி லறைந்தனரிவர்
தமிழ்நாடெங்குந் தகையுறவிளங்க
இமிழ்தாயின்னா லியற்றியுள்ளது
இருவித்தொழின்முறை வளமுங்கிளத்து
மருமைநூலென வறைதலுகலினே
யன்னவனூலே யாயுங்காலே
சொன்னவிவெனத் தலங்கவில்லே
நெல்லை ஜில்லா சேர்வடகிழக்கி
னெல்லைவிளங்கி யிஸ்லாத்திறக்கும்
தன்னகர்நாகலாபுரமதனிற்
சொன்னயம் பொருணயந்தோன்றமாவறிவ
னகன்றவிருதா மூன்டுமுன்னர்
புகன்றனனென்றே புகல்வருமுளரே
இருவித்தொழில்புரி கிளைஞர் பலரும்
விருப்பத்தோடிதை விளங்கவின்னுள்
விடுகவியன்ன விறனபிமீது



முடுகுச்சிந்துகண் மொழிவாரிவனே
யன்றியிந்நூ லணியுறமுழுது
மின்றுகாணவு மெட்டாதாலே
முழுநூல்கண்டு முறையோடுமைந்தை
வழுவறத்திருத்தி வனப்புறவமைக்க
வேணுமென்றெனை வேட்டலாலவ
ராணையைமறவா தகத்திடைபெய்து
நாட்டுப்புறங்க ளகனூர்தோறு
மேட்டுப்பிரிதியை யெய்தமுயன்று
பன்னாளலைந்தும் பயன்படாதாகி
யின்னாட்சீர்பெறு பூசனூரென்னும்
நவையழ்புகழ் நகர் வாழநன்பர்
ஸெய்யதுமைதின் ராவுத்தர்தானு
மறிவிற்சிறந்தோ ரன்பின்மிகுத்தோர்
நெறியுடனேட்டை நேர்ந்தாரதுவும்
பொருவுஞ்சிறப்புமெய்ப் புள்ளிகளுர்க்க
மெதுவுந்தோன்றா தெழுத்துப்பிழையு
மினமறியாசிற் றினவறன்றன்
மனமதுசென்ற வாறுய்வரைந்து
செல்லுமரித்துச் சீரன்றுயொரு
சொல்லுஞ்சரிவரத் தலங்காதுமியு
மன்னூற்றுறைக ளனுகுஞ்சிந்துமற்
றின்னூவிற்சில தில்லாதாகியு
மிருந்தவின்னா விறந்துபோகா
திருந்தமட்டிற் பொருந்தவென்னா
வின்றிமையாகல் விசையுஞ்சிந்துக்
ளன்றிகவிப்பா வதினடையன்ன
வோதுமவர்க ளுள்ளம்விளங்க
வேதுக்குறைவிலா தியன்றமட்டு

மோர்பிரபந்த முறுரூபம்போ
லார்பெறமுழுது மமைத்துத்திருத்தியு
மணிகொளமுழுதும் வரைந்துநன்றே
யணிகொள்விஃதை யச்சுப்பதித்தனன்
அசல்ரூபம்வெளி யாய்வரினறிஞர்
வசமாய்த்திருத்த வணங்கினேனால்
உழுத்திப்பாட்டென வுரைக்குமெவையு
மிழற்றுவபோல விளங்கலாலே
யின்னானடையை யினியநடையென
தொன்னூலாய்ந்தோர் சொற்றுவர்திடனே
காவுபண்டைக்குக்கல்லுயிரொவையுங்
காவுமக்கா காக்குநபியைத்
துதித்தற்கடனெனச் சுருதிகளாய்ந்தோர்
விதித்தலாலே விறனபிசீர்த்தி
விளங்கச்செய்யுமிம் மேனாறன்னை
களங்கமற்றுங் கனமகிழ்வோடு
மோதுவருண்மை யறிந்தெப்
போதும்வாழ்குந ரிறையருள்பூத்தே.

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

# திருமக்காப்பள்ளு.

## கடவுள் வணக்கம்.

### காப்பு.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

1. பார்பெறும் பொருளிரண்டும் பயன்பெற நிருவழிச்செல்வம்
நேர்பெறவருளுமோங்கி நீடூழிகாலம் வாழ்க
சீர்பெறுமக்காவாழுந் திருநபியிரசூலுல்லாமேல்
ஏர்பெறும் பள்ளிசைக்க இறையவன் காப்புத்தானே.

### கலிப்பா.

2. வையகத்திலேசிறந்த மக்கமதினத்திலெவளர்
சையதிரசூல்நபியார் சாய்பு தன்மேற் பள்ளிசைக்க
மெய்யாக வண்டமுயிர் மென்மேலுமேபடைத்த
ஐயமில்லா நாயனவனுதரவுங் காப்பாமே.

### நபிஸ்துதி கலிப்பா.

3. பொன்மயமாயெங்கும் புண்ணியங்களுண்டாகுங்
நன்னல்விளையும் நற்கதலி செந்நெல்விளையும்
நன்னகரா மக்கமதில் நல்லரசசெய்யுமெங்கள்
அன்னமுகம்மதுவாமாதி நபிகாப்பாமே.

### கட்டளை கலித்துறை.

4. மதியாத நேரலர்வாழுவரோ விவ்வினைமாநபியைத்
துதியாதகாவது நேரலவே புவிமொர்க்கத்திடை
கதியாறும்கல்வி யெமையாட்கொள விளிகாவுமக்காப்
பதிவாழுகம்மது பூங்கழலைப்பற்றிப்பாடுவமே.

5. மாறுப்புகழ் மக்கமா நபிநாமம் வாழ்த்திடவே
பிறநசைவலைப் பேர்த்திடுமின்னும்பெருவினை
கூறும்பவக்கடல் நீய்த்திடும் புண்ணியக்குவடுயருந்
தேறுதவெஞ்சமுந் தேறிவரும் ஞானச்சித்தியுமே.

நிலமண்டில வாசிரியப்பா.

6. எங்கும் நிறைந்த விறையருளொளிவு
தங்கியே நபிமார் சார்பாயிலங்கி
அபுதல்லாசாகிபு வழங்கிய நெற்றியில்
பபதியினொளிபோல் பளபளவெனவே
ஆணிமுத்தாகி யழகான நபியார்,
மாநிலந்தன்னில் மயிலாய்ப்பிறக்க
மின்னொளியாகி விளக்கொளியாகி
தன்னை பதித்தவர் சாகிபு நபியும்
கலந்ததோர் சண்டைக் கடக்கரிக்கலகம்
அலம்பலொழிந்த வன்பதாம் நாளில்
பதிவானறப்பில் பவிரெண்டாந் தெய்தி
கெதியான திங்கட்கிழமையிராவில்
எதிர்காபத்துல்லா ஈசான்யமூலை
முதியாயித்தாலிபு முழுநிமனையில்
பரிமளவாசம் பரிந்தெங்கும் வீச
நிரமையாய்க் கிழக்குத்திசைதனைநோக்கி
கொப்புளுந் சுன்னத்துங் குறைகளில்லாமல்
ஒப்புடனவையு மொழுங்கின்படியே
கால்கை முகமுங் கழுகியூதியே
மேலதுகலிமா விரலையுயர்த்தி
ஆமினளம்மா ளடிவயிற்றிருந்து
பூமியைப்புரக்கப் பிறந்தனர் நபியும்
மிகவும் புகழொடு விளங்கிடுநாயன்



சிகரான ஜிபுரியில் சேர்ந்தமலக்குகள்
தூதர்கள்தனக்குச் சொல்லியனுப்பவே
நாலுகிசுத்துடன் கடந்துவிங்கிதமாய்
பெண்கள் கூறுவிகள் பிரியமாய்மகிழ்ந்து
தங்கத்தினாலே தட்டுகளேந்தி
ஒப்பிலாப்பொன் னூஞ்சல்தனிலே
முப்பொருளான முகம்மது நபியைத்
தாங்கிமேல்வைத்துச் சுமந்தெல்லோருமே
ஆக்கிரமாக அல்லாமுன் வைத்தார்
கண்டதோர் நாயனவன் காட்சிதன்னை
மண்டலத்தார்க்கவும் வாக்குக்கொடுத்து
அங்குளசுவர்க்கந் தரிசயங்காட்டி
எங்குந்தீருக இரக்கினன் மக்கா
சோதிசேர் நபியைத் துங்கவர் நபியை
நீதிசேர் நபியை நெடியவன்பியை
கோதிலாதுடனே கூறிய நபியை
ஆதியாய்வந்த அகம்மது நபியை
கோசால நபியை குருவென நபியை
தேசமுழுதுஞ் சிறந்த நபியை
மறையின்கண் ணபியை மாதவ நபியை
முறைநின்ற நபியை மோனமாமணியை
தனையினிற் பாதந்தான்படா நபியை
புரைபொன்றுமில்லாப் புண்ணிய நபியை
அன்பியாக்களுக்கும் அவுலியாக்களுக்கும்
ஆதாவாகிய அழகான நபியை
எம்பிரான் நபியை யிறசூல் நபியை
தம்பிரானபியைத் தாகா நபியை
நல்வேதந்தன்னை நாட்டவே திருத்தி
மேல்வீடுசேர் பேர்வழி விளக்கி

அகமதிலறிவு அருளொடுதுலக்கும்
முகம்மது நபியை முழுதுமே பணிந்தால்
அன்புடன் நபிதான் அல்லாவை வணங்கி
துன்பங்களகலத் துவாவிரந்து நல்ல
காபத்துல்லாவிற் காத்திருந்தார்க்கும்
ஆபத்து தீர்ப்பா ராண்டவர் நபியும்
நம்பினபேர்க்கு நார்ச்சாக்கொடுத்து
தஞ்சமீதென்று தயவுடன் காப்பார்
மக்காவெங்கு மணிமுடி செலுத்தி
சொர்க்கத்திருந்து சுகம்பெறு நபியும்
குருநெறி நாயனைக் குறித்துமே தொழுத
புறாக்கெனும்பரியில் புகழுடனேறி
கானகமெல்லாங் கடந்தப்புறத்தில்
தானவர் குதிரைதனை விட்டிறங்கி
வையத்தோ டெழுவானமுமேற்றும்
பய்த்துல் முக்கத்தஸ் பள்ளிதன்னில்
நவனங்களாரிச் சங்கையாயங்கு
கவனமாய் நினைந்து கல்மனைதன்னில்
பிஸ்மில்லாவென்று விரல்கொடுதனைத்து
அஸ்வத்தைக்கட்டி யாண்டவர் நபியும்
அல்ஹம்துலில்லா அவன்றனைத்தொழுது
செல்வமும்பெற்றுத் திரும்பியே வந்து
பஞ்சலட்சணமுள புறாக்குப்பரியும்
அஞ்சல்வைத்தோட அகட்டினர்மெள்ள
லகானதனைச்சுண்டி நடத்தினார் குதிரை
மகாமேருவான மலையையுந்தாண்டி
வேகத்தோடுயர்மாகமுஞ்சென்று
பறந்துகொண்டு புறாக்குப்பரியும்
சிறந்த நபியைச் சேராய்விட நபி



ஏழுவான மெத்தலஞ்சொர்க்கம்
வாழுவோர்கள் வாழ்த்த மகிழ்ந்து
அறவினுமேறி யல்லாவைக்கண்டு
சிறப்பாயெவையும் பேசித்திரும்பி
மக்கமேவந்து வளர்நிலைகாட்டி
சொர்க்கங்களடைய வழிநெறிகாட்டி
துட்டக்குபிரைத்தோர்க்கவடித்து
அட்டதிக்குமடக்கியாண்ட
முகம்மது நபியை முழுமனதோடு
அகமதில் நினைகுவ ரடைகுவர் நலனே.

## முகியித்தீனாண்டவர்கள் ஸ்துதி.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

7. ஒருமையுறு மருமையுறு மிறையவனை நிறையவனை யோர்ந்து [காரும்
பெருமையுற விருமையுற திசமுறிவைப் புகழறிவைப் [பெறவென்றுவோ
திருவளருந் தருவளரும் பொழில்வளருந் தொழில்வளருஞ் [சீர்பக்தாதில்
குருவளரு முருவதனை யொறுத்தவனை யிருத்தவனைக்கருது [மனமே.

கட்டளைக் கலித்துறை.

8. பகுதாதையுற்றிலங்கிக்கு நன்மகப்பலனளித்தீர்
பகுதாதையுற்றதி யாடுவமேறு மின்பதாம்பியும்
பகுதாதையுற்றதின் தேனவிப்பாயும் பலபொழில்சூழ்
பகுதாதை யாழுமுகியித்தீனையகுள் பார்த்திடனே.

9. பதந்தருசோலையுயர் பகுதாதுப்பதிக்கிறையே
பதந்தருமாதிரிசியக்கொண்டும் பலன்பெறவும்
பதந்தருவார்க்குமிக பாபோகமென்பாலுறவே
பதந்தருவாயென் முகியித்தீனே சுவுபாக்கியமே.

கலிப்பா.

10. ஆர்க்குமெவெட்டாது அல்லாதன் மந்திரியா
மார்க்கமுள்ள ஆதிகெபி மக்களை நன்றுடு (தான்
சேர்க்கையாய்ப் பண்ணைகளைச் செலுத்தும்படியாகவே
சிர்க்கமுடன் பள்ளிவந்தசெய்திதனைச்சொல்வேனே.

மூத்தபள்ளிவரவுச்சிந்து.

அடதாளம். இ-ம். பந்துவராளி.

11 கன்னத்தில் பருசனையுங், கழுத்திற் சந்தனம் பூசி
கனை பாதிமோதிரமு மினையுடனே
வன்னநற்பட்டுடுத்தி பசிர்க்கோதி செப்பமிட்டு
வாடைப்பொடியணைந்து சாடைப்பேச்சுமாய்
அன்னநடை நடந்து ஆதிகாபிமாருல்
ஆண்டவனைத்தான் தொழுது வேண்டிக்கொண்டுமே
மன்னர்கள்போற்றுந் திருமக்கமதினந்தன்னில்
மயிலப்பள்ளியும்வந்து தோன்றினளே.

12. கொச்சி மஞ்சளின்பூச்சுங் கோளைத்தாவடங்களுங்
குருஞ்சிரிப்பேப்பாமிட்டு மருகுடனே
பச்சை சிலவர்ணமாய்ப் பல்லிடைக்காவியுமாய்ப்
பாங்கும்பரியாசங்களுக் தாங்குகொய்சையும்
அச்சாயபதித்தாப்போல அழகுத்தேமலுமாக
அதட்டியுதட்டி வெகு பகட்டுடனே
மச்சவிழிகளிரண்டுமருட்டி நபிப்பண்ணைக்கு
வாய்த்தமயிலப்பள்ளி தோன்றினளே.

கலிப்பா.

13. எத்திசையும்போற்று மிருசுல் நபியைத்தான் வணங்கி
குத்தியாநக் குடும்பன்சொல்லுந்தவறாமல்
சித்திரமேபோல் நடையுஞ் சிங்காரக்கைவீச்சும்
பத்தியுடனே யிளையபள்ளிவந்து தோன்றினளே.



இளையபள்ளி வரவு சிந்து.

முடுகு.

14. சிமிச்சிறுக்கெடுத்துக் கொண்டைமுடிந்து
செல்ல நடைநடந்து மெல்லச்சிரித்து
துவிபமபோலழகு முகமிலங்க
தளிவுப்பள்ளியும்வந்து தோன்றினளே.

15. செக்களிவாசிதழும் நெத்திச்சுட்டியுஞ்
செக்துரப்பொட்டுமிட்டு விக்ளதயுடனே
தங்கப்பதக்கமிட்டு வெளிவுபள்ளியுக்
கணதாய்ப்பண்ணைக்குவந்து தோன்றினளே.

16. கோசைக்குட்டிசையக் கொத்துச்சாமும்
குலுங்கத்தங்கப்பதக்கமுடனிலங்க
மங்கைசரிலதிக வொளிவுப்பள்ளியும
வரிசை நபிப்பண்ணைக்கு வந்தனளே.

17. அன்வர நபியைநாமப் போற்றிக்கொண்டு
ஆமின் கூறியேவெகு கேமமுடனே
உல்லாசமாய்நடந்து நபிப்பண்ணைக்கு
உகந்தவொளிவுப்பள்ளி தோன்றினளே.

கலிப்பா.

18. ஆதிநபிதமக்கும் அடிமைதானென்றுசொல்லி
நீதமுடனே தொழுது நெறிமுறைகள் தப்பாமல்
வாதுபுரியாது நல்லான் பயிரிமனைவானன்
கோதிமயிர்முடித்துக் குடும்பன்வந்து தோன்றினனே.

குடும்பன் வரவு சிந்து.

முடுகு.

19. வடிக்கசாதும் பாக்குமுகமும் வாயிற்பருத்த வுதடுமாய்
முடிக்ககொண்டையி லுருமால்கட்டி முத்தக்குடும்பன்
[தோன்றினன்.

20. பிறைமுக்கணுங் சாறுவயிறும் படரிக்கருட்டு காய்பு
[மாய்

கூழைக்கையும் விரிய முத்தக்குடும்பனும்வந்து
[தோன்றினான்.

21. ஜெகமதிற் மக்கமதினை காட்டில் சென்னெல்விளையும்
[பண்ணைக்கு
முகம்மது நபிபாதம் வணங்கி முத்தக்குடும்பன்
[தோன்றினான்.

22. அட்டதிசையும் புகழும் நபி யாண்டவர்பண்ணைசெலுத்த
[வே
இட்டமாகவே முத்தக்குடும்பனும் இரத்துடன்வந்து
[தோன்றினான்.

23. கோட்டு மண்வெட்டி யரிவாளுங்கொண்டு கூன்முதுகுங்
[காட்டியே
முட்டிவலிறும் செட்டைக்காலுடன் முத்தக்குடும்பன்
[தோன்றினான்.

24. ஆதிபிரான்பாதம் அனுதினமும் போற்றியே
கோலக்கம்பிளிமூடியே முத்தக்குடும்பனும்வந்து
[தோன்றினான்.

குடும்பனும் பள்ளியரும் நபியைப்போற்றி வாழ்த்தல்.

கலிப்பா.

25. பத்தினியானவொளியும் பாங்காகவே நடந்து
முத்தக்குடும்பனுடன் மூத்தபள்ளியுமயிலி
சுத்தமுடன் நீராடிச் சுகம்பெறவேயாதி நபி
நித்தமேயென்று சலாஞ்செய்பி வாழ்த்துவரோ.

ஆதிதாளம். ௨-ம். மோகனம்.

தரு பல்லவி.

போற்றுவோமே யெங்கள் நபியைப்—பாடிப்புகழை
யேற்றுவோமே யெங்கள் நபியை





அனுபல்லவி.

போற்றுவோமே நாமெல்லோரு
மாற்றுவோமே யெங்கள்குறை
யாற்றுவோமே சலவாத்தைச்
சாற்றுவோமே நாளுமிகப்—போற்றுவோமே.

சரணங்கள்.

செங்கதிர் தனைத்தடுத்தார்—கதிர்மறைந்த
திங்களைத்துணைக்க விடுத்தார்
பொங்குந் தண்ணருளைக் கொடுத்தார்—தசைக்கட்டியைப்
பூவையாக்கி பூவிலெடுத்தார்
சிங்கம் புலிமான் முதலியங்களுஞ் சிலபறவை
தங்களிடம்வந்துபேசத் தங்கவருளை நாடிப்
போற்றுவோமே எங்கள் நபியை.

சாபிரின் புதல்வர் தம்மையு—மிறந்தபின்பு
தக்குயிர்தந்தார் செம்மையும்
பாவங்கள் நீக்கியே யிம்மையும்—மறுமையுமே
பாதுகாப்பார் நாளு மெம்மையும்
கோபமும் பேராசை லோபஞ் சாபமுஞ்சோபம்வினைகள்
தாபம்நீக்கியெம்மில் ஞானத்தீபமேத்திவைப்பதற்குப்
போற்றுவோமே யெங்கள் நபியை.

மான்மதங்கள்காதம் வீசுமே—விருந்தைப்போக்கும்
மாநபியின்முகத் தேசுமே
வான்புவியும் புகழ்பேசுமே—யுண்மைகொளவும்
மனதினின்று நீங்குமாசுமே
கான்மலர்த்தேன் காவுமக்காக் கோனடிமலர்ப்பதத்தை
மேன்மையுடன்போற்றி யெங்களான்மா கடைத்தேறவ
போற்றுவோமே யெங்கள் நபியை-பாடிப்புகழை [தற்குப்
யேற்றுவோமே யெங்கள் நபியை.

வேறுசிந்து.

ஆதிதாளம். இ-ம். ஆனந்த பைரவி.

27. அனுதினமு முனைமறவோம் ஆதிநபியே—யெங்கட்
காதரவும் நீரல்லவோ ஆதி நபியே
எனதுடைய பிணியைத் தீர்க்குமிரசூல் நபியே—யும்மை
யென்றென்றும் நாங்கள் மறவோ மிரசூல் நபியே
நானடியே னுமை நம்பினேன் நபியிரசூலே—யென்னை
நாள்தோறுங் காப்பவரே நபியிரசூலே.
வானந்தன்னில் புதுமையொளி வாகநபியே—இந்த
மானிடரைக் காப்பவரே வரிசை நபியே
காரணமாய்க் காட்சிதந்த ஆதிநபியே—யிந்தக்
காசினியைக் காப்பவரே யாதி நபியே
தாரணியையாண்டவரே சாய்பு நபியே—யெம்மைத்
தாக்கார்த்து ரட்சித்தருள் சாய்பு நபியே
நாடெல்லாம் வெற்றிபெறும் நபிமுகம்மதே—இல்லா
நல்வேதத்துக்கதிபதியே நபிமுகம்மதே
வாடாமலென்னைக் காப்பாய் வரிசை நபியே—வள
மக்கமதினத்தைக் காத்தவரிசை நபியே
சொர்க்கமதில் வாழுமிரசூல் முகம்மதே—எங்கள்
துன்பங்கள் தீர்த்தருள்வாய் இரசூல் முகம்மதே
திக்குவிசையந்து செலுத்துந்தீன் முகம்மதே—யிந்தத்
தேசமெங்குங் காப்பவரே தீன் முகம்மதே
வாசமுடனழகான வரிசை நபியே—யொரு
மயிலாய்ப்பிறந்தவரே வரிசை நபியே
நேசமுடனெம்மைக்காக்கும் நிருபநபியே—எங்கள்
நிதியோங்கி வாழச்செய்வாய் நிருப நபியே
நல்லபெருநாளையிலே நபிமுகம்மதே—எனக்கு
நார்ச்சாக்கொடுத்தருளும் நபிமுகம்மதே
அல்லும் பகலுமறவோம் ஆதி நபியே—எம்மை
யடைக்கலமாய்க் காத்தருள்வாய் ஆதி நபியே.



கலிப்பா.

28. விந்தையுடனே தொழுது மென்மேலுமேபணிந்து
சொந்த அடிமைக்குமிரசூல் நபியே தஞ்சமென்று
பந்தாணமாய்க்கும்பன் பள்ளியருமே மகிழ்ந்து
வந்துமக்க நன்னாட்டின் வளமைகளைச் சொல்வாரே.

நாட்டுவளச் சிந்து.

அடதாளம். இ-ம் சங்கராபரணம்.

29. மேவுவான்கதிர் வெப்பத்தினால் நிழல்
வேட்டுவந்தோரைத்தண் வெருட்டவுயர்
காவிரங்கன்ன கண்மலர்கந்திடுங்
கடிமதக்கரி மும்மதத்தோடுமே
தாவிகுஞ்சைப் புலன்கள் விளைந்துமேற்
சாயுங்கன்னலிற் பொழிகள் மறைத்திட
சோர்வுதுன்பம் வறுமையுமொன்றிலா
கோன்மைவாழ் மக்கநாடெங்கள் நாடே.

30. ஓட்டமென்பது பான்மது நீரதி
யொடுக்கமென்பது மாற்றலர் கோஷ்டங்கள்
ஆட்டமென்பது மென்வகைச்சித்துகள்
அடக்கமென்பது கோபமுந்தாபமும்
நாட்டமென்பது நல்வினை கீர்த்தியும்
நடுக்கமென்பது தன்னோலைமத்திகள்
வாட்டமென்பதிரப்பவரில்லென
வளம்பெறுமக்க நாடெங்கள் நாடே.

31. தாழக்காண் பதமிழ்களிறுழம்பின்
தடவக்காண்பது தின்கொடிச் சிலைகள்
குழைக்காண்பது நல்வினை தன்னருள்
தூற்றக்காண்பது தீவினை சாபங்கள்
பாழக்காண்பது கோலர்தானங்கள்

பாலக்காண்பதி யானைமதங்களை
வீழக்காண்பது ரத்தினமாரியே
விளங்குமக்க மன்னாடெங்கள் நாடே.

32. கன்னல் செந்நெல்விளைந்து சரியுந் தற்
கதலிவாழை கனிந்து சொரியும்
வன்னமாங்குயிற் சன்னைகள் கூவும்
மாங்களேறியே மந்திகள் தாவும்
பின்னிப்பின்னிக் கமுகுப்பருக்கும்
பேடையன்னங்கள் செல்வஞ் செருக்கும்
மன்னர்போற்றிய மக்கமதினம்
வளமையாகிய நாடெங்கள் நாடே.

33. பஞ்சவர்ணக்கிளிகளும் பேசும்
பார்த்துசெண்பகச் செம்மலர் வீசும்
இஞ்சியேலக்காய்க்கொம்பிலுதிரும்
இலுமிச்சம்பழந் தன்றுஉதிரும்
கொஞ்சிக்கொஞ்சிக் குரங்குங் கிளைகள்
குதித்துவர்க்கங்கள் தின்றுசெழிக்கும்
தஞ்சமென்றோரை மக்கமதினமுந்
தற்காக்கும்வள நாடெங்கள் நாடே.

34. சந்தனமரச் சாலையுங்காவுந்
தடாகமும் பெருஞ்சோலையு மிங்கு
விந்தையான பலகனிகாய்க்கு நல்
விளங்கனிகளை யானையருந்தும்
நந்தவனப்பதியின் பெருக்கம் நீள்
நதியுந்தென்னை மரங்கள் நெருக்கம்
சொந்தமாகவே மக்கமதினநற்
சுலங்கிவாழ்கின்ற நாடெங்கள் நாடே.

35. தங்கமாமலையோங்கி வளருந்



றனியேய சாதிக்காய்க் காய்த்துக் கனிரும்
சிங்கமோடிப்புதையில் நுழையுந்
தினைப்புனத்திற் கதிரும்விளையு
மெங்கும் பச்சைக்கற்பூரமணக்கு
மெவரும் செய்குவர் காபாவணக்கம்
பொங்குந் தண்ணருண் மக்கமதினம்
புதுமையாகிய நாடெங்கள் நாடே.

36. வீதியெங்கும் வயிரத்தெளிவும்
விதங்களாகவே ரத்னவொளிவும்
நீதியும்பள்ளி வாசற்கொடியும்
நெறியுடன் லெப்பைமார்கள் துதியும்
ஆதியாகிய இரசூல் நபியரு
ளானுதினமும் வளர்ந்து சிறக்கும்
சோதிமக்கமதினம் பெருகித்
துலங்கிவாழ்கின்ற நாடெங்கள் நாடே.

37. கோரியுங் குத்துவாவின் விளக்கங்
கூருனிப்பெண்கள் பணிபுழுக்கம்
வீரியத்துடன் தீன்மொழிகூறு
மேலுஞ் சாம்பிறுணி வாசங்கள் மீறும்
கூறுமாதி நபிரசூலைக்
குறித்து நித்தந் துதித்துப்பணியும்
சாரியாகிய மக்கமதினக்
தர்மமேவளர் நாடெங்கள் நாடே.

38. மாதமூன்று மழைகளும் பெய்யும்
வரிசையாற்றினில் வெள்ளங்கள் சாயும்
வேதமெங்கு முழங்கியே யோதும்
விளையாட்டின் கூட்டம் வீதிகள்தோறும்
காதகிதமுழக்கியே யாதி

கபிறுகம்மறை நாங்கள் பணியும்
கீதமாகிய மக்கமதினம்
நிறைந்துவாழ்கின்ற நாடெங்கள் நாடே.

கலிப்பா.

39. அங்கனருள் பெற்றுவளாகம்மதுவின் பண்ணைகளைத்
தக்கபயிரேற்று மக்தத்தார் புகழும்பள்ளியர்கள்
மக்கவள கன்றுட்டிடன் வளஞ் சொல்லிக்கொண்டங்கே
புக்கிபூஞ்சோலைதனிற் பூங்குயிலைக்கண்டாரே.

குயிற் சிந்து.

சம்பைதாளம். இ—ம ஆனந்த பைரவி.

40. எல்லாம் படைத்தாளு மிறையவனருளெங்கு
மென்றுமோங்கவே கூவாய் குயிலே
மல்லாடியெமைக் காக்கு மக்கநபி தீன்கொடியும்
வளர்ந்தேற வென்றென்றுங் கூவாய் குயிலே
பொல்லாக்குபிரறுத்துப் புண்யஞ்சேரகஹூரபின்
புகழோங்கி வாழ்கவே கூவாய் குயிலே
அல்லாவினமலியற்றியருள் பெருகுங்குதுபோலிக
ளதிகீர்த்தி விளங்கவே கூவாய் குயிலே.

41. வரிசை நபியாயு மக்கவள கன்றுட்டில்
வளமாரி பெய்யவே கூவாய் குயிலே
திருமக்கமதினஞ் சூழ்செய் கஞ்சைப்புலன்களிலே
செந்நெல் விளையவே கூவாய்குயிலே
தருமநெறிகாட்டுந் தாஹாவின் சன்னதியைச்
சார்ந்தோர்மிக வாழ்க கூவாய் குயிலே
திருவாகமில்லாரை கெயத்தோடாதரிப்போர்
திதியோங்கி வாழ்கவே கூவாய் குயிலே.

42. இசலாங் கொடிகள்மிகவேயறும் கல்த்தான் கட்டிலாக
ளென்றென்று முயரவே கூவாய் குயிலே



பசுமை வயல்விளைந்து பலன்கள் மிகப்பெருகும்
பண்ணைகள் வளர்ந்தேற கூவாய் குயிலே
பிசகில்லாவென்று புகழ்பேசி நடும் பள்ளியர்க்குப்
பெருஞ்செல்வ மோங்கவே கூவாய் குயிலே
விசுவாசம்வைத்தவர்க்கு வெற்றிதரு மக்கநபி
மெய்ப்புகழைத்தினம்பாடி கூவாய் குயிலே.

கலிப்பா.

43. சட்டமுடன் நாட்டுவளஞ் சதிராகச்சொல்லியபின்
இட்டமாக நபிக்குச் சலாஞ்செப்பிப் பள்ளியர்கள்
அட்டதிக்குஞ் சூழ்ந்துகொண்டாகாச மழைபெய்யக்
கட்டளையாய் கேத்திக்கடன் காரணமாய்ச்செய்தாரே.

மழைவேண்டி கடவுள் பரவல்.

சிந்து.

அடதாளம் புன்னாகவராளி.

44. அல்லாவொருவன்றனை யஞ்சரோக்தான்றொழுதார்
நல்லாம்லான்மாஸ்தைதயிலைநாயனுக்கு நோம்பிருந்தார்.
கர்ட்சியாயாநபிக்குக்கவிமாச்சொலி தான்பணிந்தார்
குட்சியாயின்மாக் நபிக்குச் சூட்டுக்கறியாக்கிவைத்தார்.
பக்தனமாய்ரொட்டி சுட்டுப்பணிந்தார் முகியித்தீனை
சொந்தமுடனபுபக்கர்க்குச் சோறுகறியாக்கிவைத்தார்.
உகந்துகேத்திக்கடன்கொடுத்தே யுமறுகத்தாபைப்பணிந் [தார்
புகழ்ந்துதுமானூர் சாய்பைப் புதுமையுடன்தான்பணிந் [தார்.
பத்திவைத்தலியார் பீவிக்குப் பாச்சோறுக்கித்தான் [பணிந்தார்
உத்த அசனுசேனுக்கு முறைமையாய்ப்பானக்கம்வைத்தார்.

காரணக்கோதிரொவிக்குக் கத்தரியாக்கித்தான்பணித்தார்
பூரணமாய்க்காட்டுவாவுக்குப்புதுச் சந்தனக்குடமெடுத் [தார்.
பொன்னிவைத்தமீரு சாப்புக்குப் புதுமையுடன்தான் [பணித்தார்
இப்ரகிமாய்த் துவாவந்தொல்லி பிசாகமியைத்தான்பணித் [தார்.
சேத்தியாய்ப்பூப்பமூமும்வைத்து மெயிஞானத்தான்பணி [த்தார்
வாழ்த்திமிகதுவாவோதி மதாருசாய்பைத்தான்பணித்தார்.
சீருடனேகபீசமைத்துச் சிக்கந்தைத்தான்பணித்தார்
பெருடனேவயிபுறும்சாய்பைப் பிலாய்சோறுக்கித்தான் [பணித்தார்.
செல்வமுடன்இன்கள்கூறி சேகாதிசாய்பைத்தான் [பணித்தார்
சொல்லுறுதியாய்கினைந்து சுல்த்தான் சாய்பைத்தான் [பணித்தார்,
சட்டமாய்ச்சாம்பிராணியிட்டுச் சதகத்துல்லாவைப் [பணித்தார்
அட்டதிக்குவிளங்குமெல்லை அவுலியாக்களைத்தான்பணித் [தார்.
ஒளிவரும் வெப்பமாளா புகழியுடன்றான்பணித்தார்
ஆதிநபியாண்டவரினடிமையான பள்ளியர்கள்.

கலிப்பா.

45. போற்றியபின் காயறுட புதுமையாய்ப் பூமியெங்குஞ்
சுத்திரமாய்க் கார்மேகஞ் சூழ்ந்துதிரண்டனதுவே
வாழ்த்தியபோர் பள்ளியர்கள்வரிசை நபியைப்பணித்து
சேத்தியுடன் பெய்யுமழை கிளைவதித்துசொன்றனரே.



மழைக்குறியோர்தல் சிந்து.

அடதாளம். இ-ம் ஆனந்த பைரவி.

46. வாடைக்காற்று சேற்றுமின்னு மோடிவீசுது—வானம்
வரிசைநபி கிருபையாலே யுருமிமின்னுது
சாடையாயண்டிலும் பேடுங்கூடிப்பேசுது—கேணித்
தண்ணீர்த் தவளையெல்லாமுன்னிச்சொல்லுது
ஓடைகண்டு சேற்றையள்ளி மூடிக்கொள்ளுது—மழை
யூத்தெடுக்கப்பேயும்போலத் தோற்றுது பள்ளா
நாடெலாம் பணியுகின்ற நபியிறசூல் பண்ணை
நாமல்லவோபார்த்திடுவோம் சேமமுடனே.
47. இப்படிமழைபெய்து வெள்ளங்குட்டத்திலே வய
லேகனபிகிருபையான் முப்போகம்விளையும்
கட்டெறும்பு முட்டைகொண்டு திட்டுமேறுதுபயிர்க்
காட்டிபார்க்குங்காலமிப்போ தாச்சதுபாராய்
குட்டத்தண்ணில் மச்சமிட்ட முட்டைபொரித்துமிகக்
கூடுமீனைப்பிடிக்க வலைதேடுவோம் வாராய்
அட்டதிக்கு வெற்றிபெற்ற வட்டமங்குலக்குடை
ஆதிநபி கிருபையுண்டெப்போதும் நமக்கே.
48. சங்கையளவுமில்லாமற் பொங்கித்தாமரைக்குளங்
தத்தளிக்கச்சாயும்வெள்ள முத்தக்குடும்பா
கொக்காணிக்காழைக்குடையுங் குத்துக்கம்புமண்வெட்டி.
கொண்டுபோய்க் கம்மாயோரத்திலொண்டுவேன்பள்ளி
மங்கையொளிவுப்பள்ளி செங்கனிவாயைத்திறந்து
வாறுங்காண் குடும்பனே சோறுவுண்ணென்றுன்
தங்கநூதுசலாடிவரு மெங்கள் நபியாண்டவரைச்
சலாமுசொல்லிப்பணிந்தவர்க்குப் பலன்கள்வருமே.
49. பத்தமும் விளக்கெண்ணெய் முந்தவேவேணுங்குடும்பா
பாங்குடனேயார்நமக்கு வாங்கித்தருவார்

எந்தவேளையுங்கண்மாயி லந்திசந்தி காத்திருந்தா
லேத்துமீனேறிக்குதிக்கும் பார்த்துப்பிடிப்போம்
செந்தாழை நெல்விளையும் இந்த வருஷம் பள்ளி,
செங்கிடாயறுத்து நாங்கள் பங்குபோடுவோம்
சொந்தமுக்கும்மதுபத விந்தம்பணிந்துமிதந்
தொழுதுவர நமக்குமொரு பழுதுமில்லையே.

கலிப்பா.

50. கூட்டுதலாய்வந்தமழை சோவென்றுபெய்தவுடன்
காட்டில் புலிகடுவாயி கதறிமிகவேபதுங்க
நாட்டின் மக்கமதினமதில் நயிபிரகுல் தன்னருளால்
மேட்டுத்திடலறுத்து வெள்ளங்கள் சாய்ந்ததுவே.

வெள்ளச் சிந்து.

அடதாளம். கேதாரகௌளம்.

51. வரிசையாற்றில் வெள்ளங்கள் மிகப்
பெருகியோடப்பள்ளங்கள்
வண்டலடித்து மணலைத்திரட்டிக்
கொண்டுகரையிற்சேரவே,
உருமியிரைத்து மதிரவேவனந்
செருமிப்பரந்து சிதரவே
யுயர்ந்தமரத்திலடைந்தகுளவி
யயர்ந்து விழுந்துதேரலே,
தருமம்பெருகு மக்கமதினக்
தாமரைக்குளம் நிறையவே
தட்டிக்கனுங்கை முட்டித்ததும்பி
வெட்டுக்குழியிலமர்ந்ததே,
மருவடி கனவெள்ளந்திரண்டு
பெருமடைகளைத்தாண்டியே



மறுகால்பிடுங்கி தண்ணீர்சாய்கிற
வளமைபாரும் பள்ளீரே.

52. இடிகள்போல குமுறுமாந்தண்ணீர்
வடியமென்மேலும் நிமிருமா
மெழும்பி பெழும்பித்தளம்புமாமச்சங்
குழம்பிக்குழம்பித்துளம்புமாம்,
திடிரெனப்புலித்தியங்குமாந்தவ்வி
சொடிமரப்பினின் மயங்குமாந்
சிங்கம்பயந்துமோடுமாம்புலி
பெயங்குந்திரிந்து வாடுமாம்,
முடிகிப்பறக்கும் பட்சிகள்வெள்ளந்
துடிகளாநிந்து மெச்சியே
மூங்கிக்குழித்து மெழும்பியேவந்து
தங்குமெய்கீன்மரத்திலே,
குடிகுடியாய்க்காக்கும் நயிபீ
ரடுமையாருந் தீர்க்கமாய்
கோவென்று தண்ணீர்பெருகிவாரக்
கூர்மைபாரும் பள்ளீரே.

53. மலைகளுருண்டு மூங்கியே வெகு
வலைகள் சுருண்டு மெங்கியே
மரங்கள் சாய்ந்து மிதக்கவே தண்ணீ
ருரங்களோடுங் குதிக்கவே,
கலைகள்மாறு மருளுமாந் தண்ணீர்
கலங்கிநுரைகள் திரளுமாங்
காடுஞ்செடியும் பரவியே பெரு
மேடுங்கரைந்து நிரவியே,
துலைதூரங்க ளுலாவுமாங்காவிற்
பலவிதக்குயிற் கூவுமாம்

சத்திக்கெவியாய்ப் பரித்திடுமடி
    யத்து மரங்கள் முறித்திடும்,
சலசலவென்று மீன்கள் பெருகிப்
    பலபலவித மாகவே
தாமரைக்குளந் செருமித்துள்ளுற
—— சமர்த்தைப்பாரும் பள்ளீரே.

54. நல்லமகர மீன்கள் இருக்கை
    பல்லுங்கெண்டைகள் தொண்டமீன்
சுகிரிசேரி வெளாமணலி
    பகருஞ் சுறுவுஞ் சிலாமீன்
உல்லமீனுடன் சாவாளைபல
    ஆழிகிழி தேழிமீன்
உடகன்பன்று சாளை கூனி
    யோடுவாவலுந் தேடுமீன்,
செல்லவாழை கட்டா குதிப்பு
    சீரா பஞ்சாலை யாருமீன்
சேற்றமணலை யுழுவை குரவை
    மினக்கெழிருடன் கூனக்கெண்டை,
மெல்லத்துள்ளு மயிரையும் விறால்
    சள்ளை கத்தளை முட்டிமீன்
விளங்கு நெத்திலி கெய்க்கோளாவுடன்
    துலங்குமாங்காச் குடையும்,
அல்லா நபி நால்வேதமுறையி
    லடுத்திடும் பலமீன்களும்
ஆமீன்கூடி தண்ணீரின் முங்குற
    வழகைப்பாரும் பள்ளீரே.



கலிப்பா.

55. தக்கமாய்ப்பள்ளனுமின் சாய்ந்தவகை சொன்னதற்பின்
சொக்காரப்பள்ளிகளுஞ் சொல்லுறுதியாய் மகிழ
மக்கநபி யாண்டவர்தன் வளம்பெருகுங் கணமாயின்
மெய்க்கவே பட்சிவந்து மேய்ந்தவகை சொல்வாளே.

பறவைச் சிந்து.

தரு பல்லவி.

அடதாளம். ஆனந்த பைரவி.

56. மேயினும் பெண்ணே பறவைகள்
மேயினும் பெண்ணே.

அநுபல்லவி.

மேயினும் பட்சிகள் நாயன் நபியுல்லா
    மென்மேலுங் கார்க்குமுக்மதுவே பொன்று
மாயமதாய்க் காக்கைக் கூழைக்கிடாக்களும்
    வங்கணமாய்க்கூடுஞ் செங்காலுநாரையும்
        மேயினும் பெண்ணே.

சரணங்கள்.

எக்கீன்மாத்தி லடைத்திடும் பட்சி
    யினங்கள் வகுப்பாய் மனங்கொண்டெழும்பியே
திக்குவிசையுஞ் செலுத்து நபியுட
    சீர்பாதம் போற்றியே கூராய்த்திரண்டிங்கே
மக்கத்தில் தாமரைக் கண்மாய்முழுதும்
    வந்துவிழுந்திடும் பந்திபந்தியாக
முக்குளிப்பானுடன் வக்காவுங் கொக்குமே
    மூர்க்கமாய் நாரையும் நீர்க்காக்கைப் புள்ளுகள்
        மேயினும் பெண்ணே.
வையகத்தோர்போற்று நாயன் நபியை
    வணங்கி யிணங்கியே யெங்கும் பறவைகள்

சையோகமாகவே கும்புகும்பாய்க்கூடி
தாமரைக்கண்மாய் வரங்கரையோரத்திற்
பையப்பையத்தவ்விக் கெண்டையைக்கொத்திப்
பதறிவிழுங்கிப் பாக்கமுழிக்குது
தையலே வக்காவுங் கழுகு கருகாரை
சார்பானவுள்ளான் குருகுசிரசியும்
மேயினும் பெண்ணே.

எண்டிசை கார்த்திமோதி முகம்மது
இரசூல் நபிபாத மென்றனும் போற்றியே
மண்டியாய் நீரைக்கலக்கு முழுவையை
வாயினாற்கொத்தி புடாயம்தாகவே
தின்றுமுழுங்கியே விக்கிக்கக்கிக்கொண்டு
செருக்குது நல்ல பறக்கிறபட்சிகள்
அண்டிலு மீன்கொத்திப் புள்ளும் நீர்வாங்கியும்
அல்லாவைவேண்டியே யுல்லாசமாகவே
மேயினும் பெண்ணே.

தாராவு முள்ளானுங் கோழியுஞ் சென்னரை
சக்கரவாகமும் வெண்ணரை சிச்சிலி
பேராண்மை தங்கிய ராசாளி வல்லூறு
பின்னுங் கருடன் பருந்து கவுதாரி
கோராக வான்கோழி சம்மங்கோழியெழில்
கேமியப்புள்ளுடன் மீன்கொத்திப்பட்சிகள்
சீரானமக்கத்து நன்னபிப்பண்ணையைச்
சேர்ந்த குளங்கள் புலன்களைச் சுற்றியே
மேயினும் பெண்ணே பறவைகள்
மேயினும் பெண்ணே.

கலிப்பா.

57. பேருடைய ஆதிநபி பிள்ளைகாணென்று சொல்லி
யாரும் பயந்திடவே யதட்டிமுகஞ்சினந்து



தாருமாறாகவெகு தாட்டிமைகள் தான்பேசி
விருடனே நபிபண்ணை விசாரிப்பான்வந்தானே.

பண்ணையான் வரவு சிந்து.

அடதாளம் இ-ம். பந்துவராளி.

58. அங்கமதிற் சங்குமணித்தானிலங்கப்—பூமி
யதிரநடந்து காலையதிக்கொண்டு
செங்கையாற் சலாங்கொடுத்து தின்கூறியே—நபிக்குக்
கந்தணமாய்ப் பிச்சர்ப் பண்ணைக்காரனும்வந்தான்
59. மேவிலங்க வங்கியும் பொன்சாலுவையுஞ்—சருகை
வேலையிட்டு செய்ததொப்பி தலையில்வைத்து
காலிலே ஜோடுமிதித்துக் கோலுங் கையிற்—பிடித்து
காரணமாய்ப் பிச்சர்ப்பண்ணைக் காரனும் வந்தான்
60. தலைபசைப்புஞ்சரிந்து நீண்ட தாடியுமாக—இடையிற்
றமானும் பட்டையனாகான் தானிலங்க
பலபல வளப்புகளு மனதில் வைத்து—வெகு
பாங்கான பிச்சர்பண்ணைக் காரனும் வந்தான்.
61. மண்டியிட்டே யடிக்கடி சலாங் கொடுத்து—நல்ல
வணங்கிநபியைத் தொழுது பிரியமுடனே
கண்டபேர் பயந்திட வன்டுறுக்கி—நடந்து
கடிதான பிச்சர்பண்ணைக் காரனும் வந்தான்.
62. வயிரச்சன்னம்பதித்த மோதிரமாய்—கழுத்தின்
மாணிக்கக் கண்டசரந் தானிலங்க
உயிர்க்குயிராய்க் காக்குமாதி நபியைத்—தேடி
யுல்லாசமாய்ப் பிச்சர்ப் பண்ணைக்காரனும் வந்தான்.

கலிப்பா.

63. பச்சத்துடன் வந்த பிச்சர்ப்பண்ணையான் றானுமங்கே
யச்சத்துட னயன்நபி யாண்டவரைத் தான்தொழுது
நிச்சயமாகமனதில் நீதிதவறாமல்.
தச்சருவமானநபி தானிதனையே தஞ்சமென்றார்.

## பண்ணையான் நபியைப் போற்றல்

### சிந்து.

அடதாளம் புன்னாகவராளி.

64. அல்லா நபியாண்டவனை யந்தநேரந்தான்றொழுவேன்
அன்புடனே காக்கவேணு மாதி நபியே
பொல்லாக் குபிர்தானகற்றி புண்யநெறி காட்டுதற்கு
புவிதனில் வந்துதித்த புங்க நபியே
ஒப்புரவாய் நினையிங்கே யுண்டாக்கும் நித்தன் மே
லுண்மைகொண்டேனெனைக்காப்பா யாதிநபியே
செப்பமுடனே யடியேன் சிந்தைதனிலே யிருக்குந்
தீவினைகள் தீர்க்கவேணுமாதி நபியே
காரணமாயடியேனுட கர்மங்களைத் தீர்த்திடுவாய்
காசினியைக் காத்தவரே யாதி நபியே
பூரணமாயெந்தனுக்குப் புத்திவித்தையுங் கொடுப்பாய்
பொன்னூஞ்சலாடி வருமாதி நபியே
அட்டதிக்கும் வெற்றிகொள்ள அவனிதனையாண்டவரே
யாதரவாய்க் காக்க வேணுமாதி நபியே
துட்டனென வந்தவரை வெட்டி விருது பரிக்குஞ்
சோதிமயமானவரே யாதி நபியே
முத்தொளிவாய் வந்துதித்து மெத்திசையுங் காத்தவரே
முத்திதருவாய் நபியே சித்தமறவேன்
வெற்றியாயுலகமெங்கும் நித்தம் புதுமை விளங்கி
மென்மேலுங் காப்பவரே யாதி நபியே
ஓலமிடுமென் குறையை சீலமிகு முன்னருளா
லொப்புரவாய்க் காத்தருள்வீ ராதி நபியே
ஆலங்கள் பணிந்துவர வேதங்கள் முழங்கி வரு
மாதிநபியாண்டவர்தம் பாத மறவேன்
மக்கமதினத்திருந்து திக்குவிசையஞ் செலுத்தி
மானிடரைக்காத்தவரே யாதிநபியே



தக்கபுகழுற்ற நபிசாய்பு தம்மைப்பின்றொடர
சகலவினை நீங்கிடுமென் றுண்மைசொல்வோமே.

### கலிப்பா.

65. வணக்கமிட்ட பிச்சயர்க்கு வாக்கருளியாதி நபி
கணக்குடனே பண்ணைகளைக் கண்பார்க்கவேணுமென்றார்
இணக்கமாய் நதிகடக்க ஏவலாட்கடானுமொரு
கணப்பொழுதிற் றோணியிட்டுச் சந்திக்கவந்தாரே.

## தோணியோட்டுவோர் வரவு

### சிந்து.

அடதாளம். பந்துவராளி முடுகு.

66. சல்லடங்கள் தானுடுத்தி யங்கியிட்டுச்—சரிகை
சல்லாவும் வல்லவட்டு முல்லாசமாய்
வல்லமைகளாய் நடந்து மக்காவினில்—வெகு
வரிசையாய்த் தோணி கொண்டுவந்தனரே.

67. தொப்பியுடன் தலையைச்சுற்றி யுருமிக்கொண்டு—வெகு
தாடிகளுமாய்க் கைக்கம்புத்தடிகளுமாய்
மெப்புடனே தோணிக்காரரெல்லாருங்கூடி—மிகு
விரசுடனே மக்காவினிற்றோன்றினரே.

68. நைதனிலே மோதிரங்கள் தானிலங்க—அவரைக்
கண்டபேர் பயந்திட வண்டுருக்கி
சையதிருசூல் நபியார்பாதம் வணங்கி—யொரு
கணப்பொழுதிற் றோணிக்காரர்தானும் வந்தார்.

69. ஆணிமுத்துக்கோர்வைகளு மிகவேகொண்டு—வெகு
அஞ்சலிலே யாயிரம்பொன் லஞ்சகம்வைத்து
காணிக்கை யெடுத்துக்கொண்டு பிச்சர்தன்னைப்—பேட்டி
காணவென்றே தோணிக்காரர் மக்காவில் வந்தார்.

70 ஏக்கனாப் பூப்பழத் தேங்காய் வகைவகையாய்—நல்ல
தங்கத்தாம்பாளத்தினின் முங்கவேவைத்து
அக்கரை மக்காவிருக்கும் பிச்சரைக்காண—வெகு
அன்புடனே தோணிக்காரர் மக்காவில்வந்தார்.

71. பட்டுகளும் பலபணிகள் விதம்விதமாய்—பட்டுப்
பாவாடையுடுத்திக் கொண்டு பூவாடையாய்
கட்டுமூட்டுமாய் நடந்து பிச்சர் தன்னைப்—பேட்டி
காணவென்றே தோணிக்காரர் மக்காவில் வந்தார்

72. ஆதரவும் நீரே யென்று நபிபாதத்தை—யவ
ரடிக்கடியேதான் றொழுது வணங்கிக் கொண்டு
பர்த்துஆன் தஞ்ச மென்றுதோணிக்காரரும்—நபி
பண்ணையார் பிச்சருட பாதம் பணிந்தார்.

73. கோத்தடுமை ஈங்கெனவே பயந்தங்கே—சற்றுங்
கூசாமற் றேணிகொண்டு நேசமுடனே
விஸ்தாரமாகவந்து பிச்சர்தன்னை—மிக
விரும்பியே தான்பணிந்து மேவியிருந்தார்.

74. விடைகொண்டு மக்கம் வந்து பிச்சர் தன்னை—மிக
விரும்பியே தான்பணிந்து வுங்கள் திருவை
முதிர்பெற்றுவந்த சாய்பைபத்தியோடு—பணிந்து
முந்தியிங்கே வந்தோமினிச் சொந்தமைகள்

75. எங்களை யழைத்தசெய்தி சொல்லுமப்பா—வும்
கேளுவாகச் செய்திடுவோம் பேதமில்லை
தொங்கலிலே யோடிவந்தோம் பிச்சரே யிங்கே—நீங்கள்
சொல்லுமிந்த ஆறுகடக்கத் தோணி யிதுவே

76. கனிபுகழ் பிச்சருமே தோணிக்காரரை—கண்ணுற்
கண்டுமனமே மகிழ்ந்து விண்டு சொல்லுவார்



வாசனைமுகம்மதுவின் பண்ணைபார்க்க—விரைவில்
வந்தேனென்று தோணியேறத் தந்திரஞ்சொன்னார்

77 மக்காவில் வெற்றிபெறும் ஆதிபிரசூல்—முகம்
மதுநபிபாதத்தை யுண்மையெனவே
சுக்கானைக்கப்பல்தனிற் கெட்டியாய்ப் பூட்டி—வெகு
துடுக்காக ஆற்றுவெள்ளங் கடத்துமென்றார்.

கலிப்பா.

78. காணிக்கை கொண்டவரைக் காண வந்த போதகர்க்கு
மாணிக்கத்தாவடத்தை வாரியவர்க்கே கொடுத்தார்
ஆணிமுத்தானநபி யாண்டவரைத் தான் றொழுது
தோணிதனிலேறிச் சுக்கானைத் தள்ளுமென்றார்.

கப்பற்சிந்து.

79. ஏலஏலோ ஏலஏலோ—இல்லல்லா
இரசூல் நபிமுகம்மதா.
ஆலநபிபண்ணைகளைப்—பார்க்க—மதிகாரி பிச்சருமே
காலந்தன்னி லாறுகடக்க—தோணிக்—காரனையுந்தான் [பார்த்து
பாலவனங் கண்மாய்முத—லெங்கும்—பாவுதுகாண் வெள்ள [மென்றார்
சோலைகடந் தாத்தோரம்—வந்து—தோணியின்மேல் [தானேறி

(துள்ளல்)

பூலோகம்வாழ்த்து நபியார் தன்னைப்போற்றி
பொங்கமாய்த் தோணிவெகு சிங்கார நேர்த்தி
மேலாகப்பாய் மரம் விரித்துமேற் பூட்டி
விதவிதமாய் விருதுக்கொடி தன்னையும் நாட்டி
நீலகார் மேகம் போல் வரிசையாறு பொங்கி
நீச்சநிலையில்லாமற் றேணியது முங்கி

மூலகாரணமான அப்துல்லா மகனார்
  முகம்மது றசூல் நபிபாதமே போற்றி—ஏலஏலோ.

80. மாதவங்கள் பெருகிறைப்போ—லெக்கின்—மாத்துயாமலே
[மோத
நாயிதமில்லாமலங்கே—கம்புத்—தடிகள்கொண்டுதள்ளிவர
சாமரைக்கண்மாய் சேர்க்கி—சுக்கான்—சாயமப்லேயேவு
[மென்றார்
சாமபிரு சாயமென்று—பிச்சர்—தானதித்து மனந்துணிந்து

(துள்ளல்)

நாமளோ நபிபண்ணைபார்க்கவே போவோம்
  காண்தாயிதமென்ன வக்கரை சேரும்
சேமமா யெல்லோருங் கூடியேமுன்றான்
  சேர்ந்தங்கே வாயெங்கும் பார்க்கவேம்பண்ணை
வீமனைப்போற் றோணிக்காரரொருபக்கம்
  வேடிக்கையாகவே ஏங்கூரந் தூக்கி
ஆமினம்மாள் பெற்ற பாலனைவந்த
  ஆதிநபிபாதமென்றனும்போற்றி—ஏல ஏலோ.

81. பச்சை மரகதம்போல-துதிக்கும்-பாய்மரங்க ணின்றிலங்க
  அச்சாரக்கட் பதித்தாப்போற்—றோணி—யாற்றுக்குருதித்
[துவர
மச்சங்கள் மென்மேலும்வர-ஆத்து-வரங்கரையிலலேமோத
  பிச்சரந்தத்தண்ணீரின்மேற் கால்கை பிரியமுட
[னேறுச்செய்து

(துள்ளல்)

இச்சையுடனுயனை மிச்சமாய்ப்போற்ற
  ஏலலோமென்று சத்தங் கடல்போன் முழங்க
தச்சுருவமான நபி பச்சம்வைத்தருள
  தங்கமாமலைகளை முங்கியே வெள்ளங்




கச்சணியும் கொங்கையர் கூறுவிப்பெண்கள்
  கவிமாவுக்க நபிபாதம்வணங்க
எச்சரிக்கையாகவே தின்தின் முகம்மது
  இறசூல் நபிபாதமென்றனும்போற்றி—ஏல ஏலோ.

82. மிக்கமதாய்ச் சென்டாக்சொடிக—ளாகேக— விருதுகளுந்
[தானிலங்க
சக்கானைத்தான் திருப்பி—டேக்கி—துலையாத நீச்கடனே
தர்க்கமில்லாமற்றோணி—மென்னச்—சாயாமலசைத்துவர
தெற்கே வெகுதூரமெல்லாந்—சுத்தித்—திரும்பியொரு
[முகமாக

(துள்ளல்)

மக்கமதினைத்தனில் வரிசையாறு பொங்க
  மாறுமல் வெள்ளங்கள் மென்மேலுஞ் சாய
சொர்ந்தது ஆமினை னைவொரு பகிறு
  சோதினை நுட்சமிது நாயனுடசெயல்தான்
பக்கமும் பாராமலாண்டவர் போல்
  பாத்தியா வோதிவெரு நேத்தியாய்ப் பிச்சர்
அக்கரையிற் சென்று தோணிவிட்டிறங்க
  அதிமா முலையுண்ட ஆதிநபிதுணையே—ஏல ஏலோ.—
[இல்லலா இறசூல் நபி முகம்மதா.

கலிப்பா.

83. வள்ளத்தனிலேறிவந்த பிச்சர் பண்ணைக்காரனங்கே
  வெள்ளாமை செய்வதற்கு வேலையாளெங்கேயென்றான்
  உள்ளமிகவுருகி யுந்தமை நாங்களென்று
  பள்ளனும் பள்ளியரும் பாதம் பணிந்தாரே.

பண்ணையாளைப் பள்ளியர் போற்றல்.

சிந்து.

84. நாங்களுமதடிமை நபியிறசூல் வர்க்கத்தாலே [சாய்பே
  நீங்களிங்கே வருவீரென்று நேத்திக்கடன் சேர்ந்தோம்

அணியாக வெங்களை நீர் சொந்தமாய்க் காக்கவென்று
மணியம் விசாரணையாகவந்தீர் நல்ல பாக்யஞ் சாய்பே
ஆசாரமாகவந்தி ராண்டவர்க்குப் பிள்ளையென்று
கூசாமற் பண்ணைவகை கூறுவீர் வேலைசெய்ய சாய்பே
மூத்தொளிவாய நபியார் முத்திரை பெற்றுவந்த சாய்பே
பத்திரமாய் நீர்தான்சொல்லும் பண்ணை வேலைசெய்
[வோம் சாய்பே
மாளிட நபிக்குநல்ல மந்திரியென்றிங்கு வந்தீர்
காரணத்தி லெங்களையுங் கருணைவைத்துக் காப்பீர்
[சாய்பே.
நேமாய்ப்பண்ணைவைக்க நிச்சயமென்றிங்கு வந்தீர்
பாதத்தாளாய் நடந்துகொண்டு பணிவிடைகள் செய்
[வோம் சாய்பே.
காயிலாஹா இல்லல்லாஹு முகம்மதுர் ரசூலுல்லாஹி
சாயறுதவிகொண்டு நபிபண்ணைகளைப் பார்ப்போம
[சாய்பே.

கலிப்பா.

85. தாபந்தாய் மேல்மணியகாரனென்று வந்தபிச்சர்
தாபந்தமேதுவினித் தாமிதமேன் பன்னியபே
சோபனங்களான சுபதினத்தி லேர்ப்பூட்டக்
கோபங்களாகக் குடும்பனையுங் கண்டித்தார்.

பிண்ணையான் பள்ளனைப் பயிர்செய்ய

வற்புறுத்தல் சிந்து.

ஆதிதாளம். ஆனந்த பைரவி.

86. இத்தனைநேரம் நீ யெங்கேபோனாய் முத்தக்குடும்பா வுனக்
கென்ன மருத்துவஞ்சொல்லடா நீ முத்தக் குடும்பா
இத்தயிரங்கி தயவுசெய்யும் பண்ணையாண்டே—நான்
செய்யும் பிழையைப் பொறுத்தருளும் பண்ணையாண்டே.



தாமிதமென்ன வயலுழுக முத்தக்குடும்பா—எங்கள்
சாய்புநபி மெத்தக்கோபிக்கிறார் முத்தக்குடும்பா
நேமியமாகப் பயிரிடுவேன் பண்ணையாண்டே—வெள்ளம்
நேற்றல்லோ வந்ததுபார்த்திடுவீர் பண்ணையாண்டே
மேல்வெள்ள மெத்தவருகுது பார் முத்தக்குடும்பா—
தண்ணீர்
வெட்டிவிடு கரைமுட்டுதடா முத்தக்குடும்பா
ஆலநபியார் கிருபையுண்டு பண்ணையாண்டே—தண்மா
யற்பழுக்கில்லாமற் செப்பயிட்டேன் பண்ணையாண்டே
வாய்க்கால் வருந்து மடைகள்திற முத்தக்குடும்பா—இந்த
மாஸத்தையிலே பட்டமாச்சுதடா முத்தக்குடும்பா
பாயுது தண்ணீருமெங்கெங்குமே பண்ணையாண்டே—மேற்
பத்து வயலெங்குஞ் சுத்துதுபாண் பண்ணையாண்டே
பண்ணை வயலைப்பாம்படிப்பாய் முத்தக்குடும்பா—வரம்
பார்த்துத்தொழிபிட்டு காத்துநடு முத்தக்குடும்பா
தின்னயமென்ன நீர் சொன்னபடி பண்ணையாண்டே—கால்
செடுகெப்பாவி நடுவே தெரிக்குது வாண்டே
சொன்னதற்காக நீயமென்கிறாய் முத்தக்குடும்பா—வுன்
சட்டித்தனத்தையும் விட்டுவிடு முத்தக்குடும்பா
என்னசெய்வேன் காளெருத்தனுமே பண்ணையாண்டே—
யுமக்
கேர்க்க நடப்பேன் நீர்காத்திடுவீர் பண்ணையாண்டே
கார்ப்பார் முகம்மதிரசூல் நபியார் முத்தக்குடும்பா—அவர்
கண்டிப்புமெத்தநான் விண்டுசொன்னேன் முத்தக்குடும்பா
தீர்க்கமடியேனவாடுமை பண்ணையாண்டே—நீர்
செப்பியவேலையைச் செய்திடுவேன் பண்ணையாண்டே

கலிப்பா.

87. நாடிவந்தபிச்சரங்கே நல்வாக்கு சொன்னதற்பின்
தேடிவொளிவிடத்திற் சேர்வோமென்றே தானினைந்தான்

கூடியதோர் மூத்தபள்ளி கூசாமலென்னை யங்கே
வேடிக்கையாய்ப் பள்ளன் மேட்டிமைகள் சொல்வாளே.

மூத்தபள்ளி பள்ளனை வற்புறுத்தல்.

சிந்து

ஆதிதாளம்—பைரவி.

88. வக்கணைப்பேச்சோமதமோ அதமோ குடும்பனே—பிச்சர்
வார்த்தைபதித்தும நீ வம்புகள் செய்கிறாய் குடும்பனே
பக்குவஞ்சொன்னாயே பண்ணைகள்பார்க்கவே குடும்பனே—யுன்
பள்ளியொளிவுபட்டும் விடலையோ குடும்பனே
கொட்டிப் பிடித்து நீகூறுங் குலந்தாயேகுடும்பனே பண்ணைப்
பாட்டில்வசங்காமல் பாசாங்குமேன்காணுங் குடும்பனே
தாட்டகமாய்ப்பேசி தன்னைகெட்டாயே குடும்பனே—பிச்சர்
தன்னைவணங்காமற் சற்பனையேன்காணுங் குடும்பனே
ஒளிவுமருந்தானுடம்பைக்கெடுத்தாயேகுடும்பனே--சோத்
தானும்வெறுத்தாயே யுயிருங்குறைந்தாயே குடும்பனே
பள்ளியிளையவள் பாரிசம் போனாயே குடும்பனே—நீ
பண்ணைகள்பார்த்திட வுன்னலாஞ் சோறுகாண் குடும்பனே
என்னைமறந்தவள் தன்னைநினைந்தாயே குடும்பனே—சொன்ன
வேட்டிக்குப் பூட்டியிடுப்புகள் சொல்லுறாய் குடும்பனே
சன்னைகள் சாடைகளுருட்டும் பிரட்டுமேன் குடும்பனே—யவள்
தானேயுனக்கு நீசொந்தமென்றாயே ஏ குடும்பனே
வர்மமாய்ப்பிச்சரும் வாங்குவார் வேலைகள் குடும்பனே--யவர்
வார்த்தையைத்தள்ளாமற்பார்த்துகட்டப்பாயேகுடும்பனே



தர்மம்வளர்கின்ற மக்கமதில் வாழுங் குடும்பனே—நமன்
சாய்புமியாருக் தர்க்கார்த்து செட்டிப்பார் குடும்பனே.

கலிப்பா.

89. பண்ணைபார்க்கவேசொல்லி பண்ணையாரேகியபின்
பெண்ணனங்கு மக்கப்பள்ளி பெருங்காம மீறி மூலை
புண்ணியஞ்சேர் தன்புருட புயவரையிற் சேர்ந்திடவே
யெண்ணங்கொண்டு பள்ளனையு மிரந்து நின்றாளானே.

பள்ளனுக்கும் மூத்தபள்ளிக்குந்
தர்க்கச்சிந்து.

ஆதிதாளம்—ஆனந்தபைரவி.

90. இனியாகிலுங்கூடி யென்னுடன் வாழ்வாயே குடும்பனே—யுன்னை
யெப்போதும் நல்லபணிவிடை செய்குவேன் குடும்பனே
கனிவாயிளையவள் கலவிக்கு நேர்ந்தவள் மயிலப்பள்ளி—யவளைக்
கண்டபோதுன்னையுஞ் சிந்துவேறில்லை மயிலப்பள்ளி
என்னைக்கலந்து வெகு நாளுமாச்சுதே குடும்பனே—யிப்போ
இருந்தாலுண்டாகி வருத்தப்படுகிறேன் குடும்பனே
உன்னைக்கலந்தாலிளையாள் பொறுப்பாளோ மயிலப்பள்ளி—யினி
யொருபோதுமுன்னுடன் கலந்திருப்பதில்லைமயிலப்பள்ளி
மருந்தீட்டினலல்லோ இப்படிப்பேசுறாய் குடும்பனே—யுன்னை
வருத்தமில்லாமல் மருந்தையெடுக்கிறேன் குடும்பனே
அருந்து மருந்து மனதையிழுக்குமோ மயிலப்பள்ளி—யொன்று
மறியாதார் சொல்லுற வீண்பேச்சுதானடி மயிலப்பள்ளி

நல்லபருவத்திற்செய்த பணிவிடை குடும்பனாரே—யிப்போ
நன்றிமறக்கமனம் வந்ததெப்படி குடும்பனாரே
புல்லவழைத்தவொரு சமையமுன்னை மயிலப்பள்ளி-யோடிப்
போனாயேதட்டிக்கொண்டென்னைமதியாமன்மயிலப்பள்ளி
பூமியுமொன்று பிழைபொறுக்குமென்பர் குடும்பனாரே--யிதைப்
பொறுத்துக்கொள் முன்செய்த நன்றியை நினைப்பாயே [குடும்பனாரே
ஆமிந்தவென்னைமுனமிருந்தால் நலம் மயிலப்பள்ளி-யிப்போ
அந்த யிளையவள் கொங்கை மறப்பனோ மயிலப்பள்ளி
காமமீறி முலைவிம்முது பாரடா குடும்பனாரே—யென்னைக்
கட்டியணைத்துச்சுகங் கொடுப்பாயடா குடும்பனாரே
நாமிந்தவேளை கலப்பதற்கோ வில்லை மயிலப்பள்ளி-பண்ணை
நஞ்சைப்பருவஞ்செயுங் காலமாச்சுதே மயிலப்பள்ளி
எச்சமையத்திலு மிளையவளாகுமோ குடும்பனாரே-யென்னை
யெய்க்கிறாயென்பாவமென் போட்டுக்கொள்ளுறாய்குடும்ப [னாரே
இச்சையெனக்கு வரவில்லையே பெண்ணே மயிலப்பள்ளி—யெந்த
விளையவள்மீது மயன்மிகவாகுது மயிலப்பள்ளி
நேர்பெறு மக்க நபிபண்ணைக்குச்சொலி குடும்பனாரேயுன்னை
நெடுநேரங்குட்டையின் மாட்டுறேன்பாரடா குடும்பனாரே
சீர்பெறும்பண்ணையார் செய்வதுமென்னடி மயிலப்பள்ளி—யிப்போ
ஜெயமிருக்கும்வரை பயமென்னசொல்லடி மயிலப்பள்ளி.

கலிப்பா.

91. உழவுவகை சொன்னபிச்சர்க் குண்மைபெறத்தன்மை சொல்லி
இளையபள்ளி யானையுங்கொண்டிருந்துவிட்டானென் றறிந்து
அழகுடைய மயிலிபள்ளனைசையெல்லாந் தான்வெறுத்து
வளவுடனே பிச்சரிடம் வார்த்தைமிகச்சொல்வாளே.



## பண்ணையாரிட மூத்தபள்ளி முறையீடு.

சிந்து.

அடதாளம். இ-ம் ஆனந்த பைரவி.

92. வாருங்கள் சாய்பே-சலாமலைக்குங்-கூறுவேன்செய்தி-வேலை செய்
வளமையிற்பள்ளன்-செய்திடுங்-களவினிற்கள்ளன்
தேருதலாகக்-குடும்பனை-யெருமையெனவே-நீங்களுந்
செப்பவே மொழிந்தான்-பயந்திங்கே-தப்பியேயொழிந்தான்
சிறுமையறியா-னுங்களின்-பெருமைக்குரியா-னொளிவையுந்
தேடியேயடுத்தான்-வீட்டினி-லோடியே படுத்தான்
பெருக்குப்பிறந்தா-னென்னுடசோறுக்குமறந்தான்-திரவியம்
பெருக்கவேதேடி-களவினிற்-பொறுத்தேதன்காணுண்டே.

93. என்னையும் பிரிந்தா-னொளிவுட-சன்னையையறிந்தா—னவள்மருந்
திட்டுக்குமெலிந்தான்-வரவரப்-பாட்டுக்குச்சலிந்தான்
அன்னமுஞ்சிறுத்தான்-மறந்தவ-னென்னையும்வெறுத்தா—னவள்வெகு
ஆசையையடுத்தா-னொழிந்துதங்-காசையுங்கொடுத்தான்
முன்னமே குடிப்பான்-கள்ளையென்-கன்னத்திலடிப்பான் சிரித்தவன்
மூஞ்சியிலிடிப்பா-னாசையிற்-நெஞ்சவன் துடிப்பான்
சொன்னதுகூறாய்-நபியுட-பண்ணையும்பாரா-னவனுட
னுடுக்கையுமொடுக்கிக்-குட்டையி-லடித்திடுமாண்டே.

94. பாட்டையுங்கெடுத்தா-னொளிவுக்கு-வீட்டையுங்கொடுத்தா—னிளையவள்
பக்கமேவருவான்-பணத்தைப்-மிக்கவேதருவான்
மாட்டையுந்தொத்தா-னும்முட-காட்டையும் பெர்த்தான் குடிக்கிற

வட்டியுமெடுத்தா-னென்னையுந்-திட்டியே முடுத்தான்
சேட்டைகள் செய்வான்-குடித்தவன்-பாட்டிலே வைவா—
னெனிவையுந்
திரும்பியே பார்ப்பா-னவனையே-விரும்பியே-கார்ப்பான்
வீட்டையுங்கெடுத்தா-னென்கையி-லோட்டையுங்கொடுத்தா
னவனுட
மேட்டிமையொடுக்கி-குட்டையின் -மாட்டுவீராண்டே.

95. ஈனத்துக்குதவான்தன்பகு-மானத்தின் மதவான்-கெடுத்தவ
னிடுக்கத்தைவகுத்தா-னவனுட படுக்கையின் மிகுத்தான்
பானைக்கள்குடித்தான் வெறிகொண்டு மானைபோற்றடித்தா
னூருக்குப்
பயந்தவனஞ்சா னுங்களை நயந்தவன் கெஞ்சான்
மீனையும்பிடிப்பானடக்கத்திற் றூனையுங்கொடுப்பா—
னவனங்கே
விருந்துகள் படைப்பா-னிவனங்கே-பிருந்துங்கடப்பான்
பூனைபோற்குறுகி யாண்டவர் தானையிற்றறுகி குடும்பனைப்
பிடித்தது பிடியாய்-குட்டையி-லடித்திடுமாண்டே.

96. குளத்தையுங்காரான் வயலுட வளத்தையும் பாரான்களியிற்
கூத்துக்கும் பொருகானெனிவுட சோத்துக்குக்தருகான்
களத்தினிற் படுப்பான் கெல்லையுமுழித்தவளெடுப்பான்—
கூசாலே
கட்டியே சுமந்தா-னவனுட-மட்டிலேயமர்ந்தான்
பிளப்பதும் வீட்டிற் புகுந்தவன் களப்படுமட்டை—
பணத்தையும்
பேய்த்தண்ணீர்க்கிரைத்தானென்னையும் வாய்த்திரங்—
குரைத்தான்
இனைத்துவந்தோர்க்கு மெவர்க்குமே யின்பமாய்க்கார்க்கும்—
நபிபன்னை
இணக்கமாய்ப்பார்க்கக்குட்டையிற்பிணைக்குங்காணுண்டே.



பள்ளனைக்குட்டையில் மாட்டுதல்.

கலிப்பா.

97. மூத்தபள்ளி பிச்சரிட முறையிட்டுச் சொன்னதற்பின்
ஏத்தபடி தானவனை யிங்கேவரச்சொல்லுமென்றே
கூத்தாடிக்கள்ளன்மூத்தக் குடும்பனையுந்தான்பிடித்து
வார்த்தையொன்றுங்கேளாமன் மரக்குட்டைசேர்த்தாரே.

பள்ளனிரங்கல் சிந்து.

அடதாளம் இ-ம் புன்னாகவராளி.

98. அஞ்சிடவே மூத்தக்குடும்பனைப் பிடித்துக்-குட்டை
யடித்திட்டார் பிச்சர் பண்ணைக்காரனும்
வஞ்சகஞ்சொல்லிப்போன பேச்சை கேட்டு-நீங்கள்
வர்மமாயென்னை குட்டைமாட்டலாமோ.

பண்ணையார் சொல்வது.

99. வாதுபேசிமெத்த வம்புசெய்தவுன்னை-குட்டை
மாட்டத்தகுமென்று நானிவ்வண்ணஞ்செய்தேன்
ஒருதுசொன்ன பேச்சறிந்தவன் மூத்தக்குடும்பா-வுன்
றுடுக்கையறிந்துன்னை நானடுக்குவேன் பாராய்.

பள்ளன் சொல்வது.

100. சொன்னவேலைசெய்வேனடியேன எங்களாண்டவ-ரி
ருல் முகம்மது நபியார்க்குந் தொந்தடிமை நானே
அன்னந்தரு முகம்மது நபியவரைக்கொண்டு-வல்
லாக்கிலைக்கு நான்பயந்து சொல்லுகிறேன்.

மூத்தபள்ளி பள்ளனுக்கு
அடிசிற் கொடுவரல்.

வெண்பா.

101. பசியினாலே குடும்பன பரதவித்துக்குட்டைதனில்
கசிதலோடங்கிருக்கக் கண்டுமனம் பொறுக்காமற்

115418

சுசிக்கிரமாய் மூத்தபள்ளி சோறுகறிகள் சமைத்து
புசித்திடவே பள்ளனுக்கு பொறுமையுடன் வந்தாளே.

சிந்து.

அடதாளம். இ-ம். மோகனம்.

மூத்தபள்ளி பண்ணையார்க்குச் சொல்வது.

102. திகழ்மிகுமோசெலியுட பேருகருச்
செய்யும் பாத்தியா பாச்சோறுமென்று
மிருக்குதம்பி கொடுத்தனுப்ப விதை
யிசைதவாமோவென் பள்ளனில்லாமலே
திகழ்ந்ததெல்லாமோர் பக்கமேவைத்து நான்
வேயத்தோடிங்கு கொண்டுமேவந்தேனப்
புகழ்மிகு நயிப்பண்ணையாரே நீங்கள்
புசிக்கச்சொல்லுமென் பள்ளனை யாண்டே

மூத்தபள்ளி பள்ளனுக்குச் சொல்வது.

103. தாறுமாறாக வென்னுடன் பேசியுந்
சற்றுமே யென்னை யெண்ணுதிருந்தும்
ஆறுதல்செய்து நீயிருக்கிலே
யறிந்தேனென் மனதிற் சகிக்காமலே
வீறுகொண்ட நயிவாழு மக்கத்தில்
விருல்மீன்விற்றதை வாங்கிக்கொணர்ந்து நெற்
சோறுங்கறியுமே பொங்கிக்கொண்டு மிகத்
துரிதமாக வந்தேனுன்னடா பள்ளா

பள்ளன் சொல்வது.

104. இளையவளுடன் நான் சேர்ந்திருந்தேனென்
றென்னை யிவ்விதஞ்செய்துவிட்டிடினும் நீ
மழைய நீலிபோல் வந்து நின்றுகொண்டு
பசப்புமுன்னுட வார்த்தையைக் கேட்டு நான்



பொழுதுமெத்தனையானாலுன் னடியிலே
புசிக்கமாட்டேனென் மக்கத்துப்பள்ளி கம்
பிழைதனைப்பொறுத்தாளு மக்கமே
பேசச்சொல்லப் பயமதுபோகுமே.

மூத்தபள்ளி சொல்லும் நொண்டிச்சிந்து.

105. கள்ளார்கமழுஞ்சோலை-மதினத்துக்
கன்னி யெங்கே யிளையபள்ளி யெங்கே
உள்ளார் வெறியுமெங்கே-யிளையாட்டி
னோட்டமெங்கேயவள் நாட்டமெங்கே
இளைபாள் மயக்கமெங்கே-யொளிவுட
இடுக்கையெங்கே யவள்படுக்கை யெங்கே
பிழைபாகெதியு மெங்கே-யுன்னுடைய
பித்துமெங்கே மணிமுத்து மெங்கே
செம்மலர்வாசமெங்கே-யெங்களுட
சிந்துமெங்கே சுகமுற்றுமெங்கே
எம்மனையழகு மெங்கே-மிடிப்பினில்
இஜாரு மெங்கே டம்பஜாரு மெங்கே
பாஸ்தரும் பகக்கனெங்கே-கைமிருப்புப்
பணமுமெங்கே கல்லுணமு மெங்கே
பேல்வீடு மெத்தையெங்கே-கீறுங்கை
விச்சுமெங்கே வீரப்பேச்சு மெங்கே
நடக்கைபொய்யார மெங்கே-படிக்கடி
நகையுமெங்கே யுந்தன் பகையுமெங்கே
விடக்கண் மருட்டுமெங்கே-சமுக்கான
விரிப்புமெங்கே கள்ளச் சிரிப்புமெங்கே
அங்கைக்கடகமெங்கே-கழுத்தணி
யாரமெங்கே முலைப்பாரமெங்கே
கொங்கையில் ரவுக்கை யெங்கே-மேலணியுங்
குடுத்தாயெங்கே பட்டுப்பத்தா யெங்கே

சிங்காரச் சால்வை யெங்கே-பொன்சரிகைச்
சேலையெங்கே ரத்ன மாலையெங்கே
குங்குமப்பூ மேனியெங்கே-மாடுகட்டுங்
கொட்டமெங்கே யிட்டசட்டமெங்கே
யானைகட்டும் பலமுமெங்கே-பலவிடை
யாடுமெங்கே யெங்கள் மாடுமெங்கே
ஏனைப்பவுசுமெங்கே-பள்ளரி
லேற்றமெங்கே யவர் மாற்றமெங்கே
நங்கைப்பருவமதில்-நான்செயும்
நன்றியெங்கே யூட்டுஞ் சோன்றியெங்கே
செங்கைத்தொழிலுமெங்கே-வாழுமெங்கள்
சீருமெங்கேயந்த நேருமெங்கே
போனதை நினைக்காதினி-யென்னுடன்
புல்லுவையே யென்னசொல்லுவையே
கோனவர் நபிபண்ணைக்குக் கேட்டென்னைக்
கூட்டுவேனே யிப்போ மீட்டுவேனே
சொர்க்கஞ் சேர்ப்பதற்கு மகஷரில்
துய்யவனைக்கேட்கு மெய்யவராம்
மக்கநபியிரசூல் மலர்ப்பதம்
வணங்குவமே நல்ல இணங்குவமே.

தந்தன தந்தன ரு.

106. கிடந்தபள்ளனை மூத்தபள்ளி கண்டு
கேலிசெய்யவுமாரம்பித்தாளந்த
மடந்தைக்கள்ளி மதினத்துப்பள்ளியும்
வந்துசேர்ந்து மயக்கமருந்துகள்
கடந்ததற்பினுங் கூருங்குலைந்து நீ
கலிந்துபோனாயே நாளுக்கு நாளினி
உடந்தையாரிப்போ மக்கமுஹம்மதை
யோர்மைகொள்ள பள்ளா வினை நீங்குமே.



பள்ளன் சொல்வது

107. வருவினையது வந்துதான் இருமே
மயங்குவதினாலாவது மென்னடி
மருமலரணிகூந்தற்சுடர்த்தொடி
மதினத்துப்பள்ளி தன்னொழில்செய்பணி
யொருசணமு மறப்பதற்கில்லையே
புரைக்குமெனவன் வக்கிரந்தானடி
திருமக்காபி தன்னையும் வாழ்த்தியே
சேருவேன்பள்ளி யினையவ டன்னையே.

மூத்தபள்ளி சொல்வது.

108. பணிவிடையும் பலன்கள் குறைக்குமோ
பாலருந்துநன் மேனிமெலியுமோ
அணிகலங்கற்பு மாதர்க்குபோதுமென்
றறைகுவ ரறிவுள்ளவர் நாளுமே
துணிவோடும் வலி புத்தியுமெங்கு நீ
தோற்கடித்திட்போவிக்கதியாகினை
பிணிமருந்துங் கவலையும் நன்னபி
பேரைச்சொல்லப் பறந்திடுமென்பதே.

பள்ளன் சொல்வது.

109. வாழும்போதினில் வல்லதைச்சொன்னாலும்
வருத்தமொன்றுமே தோன்றாது பாராய்
தாழும்போதிலவர் முன்பு குற்றமே
சற்றுசொன்னாலு மெத்தவருத்தமே
பாழுங் குட்டையின் மாட்டி நானிருப்பதைப்
பண்ணையார்க்குரைத் தென்னையு மீட்பையே
எழுவானமு மெத்தலஞ் சொர்க்கமு
மேற்றுமக்க நபியுனைக்காப்பரே.

கலிப்பா.

110. மயிலிதான் கூறுசொன்ன வார்த்தைதனைக்கேட்டுப்பிச்சர்
செவிரோடு குட்டைதனிற் சேர்த்திட்டார்பள்ளனையென்
றுயிர்பதறி யிச்சரிட முண்மையைப்பேசவென்றே
குயின்மொழியாளிளையவளுங் கூடுடனே வந்தாளே.

இளையபள்ளி பண்ணையாரிடஞ்
சொல்லுஞ் சிந்து.

அடதாளம் இ-ம் புன்னாகவராளி.

111. மூத்தபள்ளி வார்த்தைகேட்டு பண்ணையாரே—யுங்கள்
மூத்தப்பள்ளனை குட்டை மாட்டினீரே
பார்த்தவர்க்குவெகு வுண்மைகாட்டியே கள்ளி—பண்ணை
பலசொத்தெடுத்துமவள் தாய்வழி சேர்த்தாள்
வார்த்தைகள் பேசிக்கடுத்த நான்முதலவ ளென்மேல்
வர்மம்வைத்துச் சிக்கிக்கள்ளி யிப்படிச்செய்தாள்
பேர்த்துய்ம்கபி பண்ணையாரே நியாயங்கேட்டால்—வெகு
புண்ணியமுண்டு பள்ளனையும் விடுவிப்பீராண்டே.

பண்ணையான் சொல்வது.

112. செப்புமூத்தபள்ளி வெகு வுண்மைக்காரி—யவள்
திருநபி பண்ணைக்கேற்ற வேலைக்காரி
இப்படிக்கேயுண்மைபோற் சொல்லவந்தாயே—பெத்த
னெறிபள்ள னுன்றுலேதான் கெட்டானே போடி
தப்பிதமுன்மேலதிகம் விசாரித்தேன் பள்ளி—யுண்மை
சற்றும் பிசகாதே மயிலி மூத்தபள்ளி
எப்படியார் சொன்னாலுமே புங்கனிலமை—தன்
நியாயமிலேவன் கன்னத்தனமோடிப்போ பள்ளி.

பள்ளனிளையபள்ளியோடு சொல்வது.

113. எங்கள் தூர்கடத்தைக்கேட்டு பண்ணையாரு—யிப்போ
திருக்கிறார் கோபத்துடன் வாராதேபோடி.



எங்கும்வழிப்போக்கர் காலிற்றைத்தமுள்ளை—முள்ளா
லெடுப்பதுபோல மூத்தபள்ளியாலே
மங்கலம்பெருகும் பண்ணையாரைச்சொல்லி—மீட்க
மயிலைப்பள்ளியை நயந்தேன் செய்வதென்னடி.
தங்கும்புகழ்மக்க நபிபொருத்தெங்களை—யிப்போ
தர்க்காப்பார் சீக்கிரமாய்ப் பார்க்கலாம் பள்ளி.

கலிப்பா.

114. மூத்தபள்ளியிடம் பள்ளன் முறையிட்டு நயந்திடவே
பார்த்துமவன் மனதிரங்கி பட்சமறவாமன் மிகத்
தோத்திரஞ்செய் மக்கநபி சொந்தப்பண்ணையாரிடத்திற்
கார்த்தருளவேணுமென்று கதறுவாளானே.

பண்ணையாரிடத்தில் மூத்தபள்ளி பள்ளனை
மீட்க நயந்து கேட்கல் சிந்து.

ஆதிதாளம்—ஆனந்தபைரவி.

115. அல்லாமு அலேக்குத்திருநபியின் பண்ணையாண்டே—யுங்க
ளடைக்கல மெங்களைக் காத்துக்கொள்வீர் பண்ணையாண்
[டே
இல்லாமற் கனகாச மனமையுண்டு பண்ணையாண்டே—யவ
னெப்படியிருந்தாலும் நான் பொறுத்தேன் பண்ணை
[யாண்டே
அவன் புத்தியாலொன்று மாகவில்லை பண்ணையாண்டே—
யொளி
வதிமயக்கத்தாற் பிழை செய்தனன் பண்ணையாண்டே
எவரு மூன்றுபிழை பொறுப்பாரான் பண்ணையாண்டே—
நீங்க
ளித்தக்கடவை பொறுத்துக்கொள்வீர் பண்ணையாண்டே
வன்னாத்துக்குக்கின்னம் பேசவுதம்பண்ணையாண்டேயத்த
மதினத்துப்பள்ளிதன் மருந்திட்டிறலல்லோ வாண்டே.

பண்ணையுழுகும் பருவமுமாச்சுதே யாண்டே-யுங்கள்
பள்ளனில்லாமலோர் வேலையுமாகாதே யாண்டே
பள்ளக்குலத்தில் வெகு மரியாதையோடாண்டே-நாங்கள்
பார்மதிக்கவே பிழைத்திருந்தோம் பண்ணையாண்டே
கள்ளச்சிறுக்கியொளிவையுஞ் சேர்ந்துமே யாண்டே—பள்ளன்
கனக்குறையாகின னினிபுத்தி வந்திடுமாண்டே
நயந்துசொல்வதற்கென் செய்யலாம்பண்ணையாண்டே-யினி
நற்புத்தியோடுங்கள் சொற்புத்தி கேட்பானே யாண்டே
பயந்து பண்ணைகள் பார்ப்பானே காண் பண்ணையாண்டே—பிழைய
பள்ளி மயக்கமினி விடுவானே காணாண்டே
அடியார்செயும் பிழை பொறுப்பதுங்கள் கடனாண்டே-யாரு
மாதரிப்பாரில்லை பள்ளனைக்காப்பீரே யாண்டே
தொடையிற் குழந்தை மலங்கழித்தாற் பண்ணையாண்டே—யதைத்
துடைப்பதல்லது தொடையை யறுப்பீரோ வாண்டே
குழந்தைமுதல்லல்ல வேலைகள்பார்த்தவனாண்டே-யிப்போ
குறையாதுயில்லாமற் பண்ணைகள்பார்ப்பானே யாண்டே
எழுந்திருக்காமற் கலையாற்கிடக்கிறானாண்டே—குட்டை
யெடுத்தெரியும்படி யுத்திரவுசெய்வீரே யாண்டே
எங்கள் குலத்திலொருவரு மிப்படியாண்டே—குட்டை
யிருகாலின் மாட்டவிலையிது வெட்கமேயாண்டே
இங்களழைத்தகபி தன்னருளாலே யாண்டே—யொன்று
சேர்ந்து பண்ணைகள் பார்த்திடுவோம் பண்ணையாண்டே

கலிப்பா.

116. வல்லமையாய்க்குட்டைதனின் மாட்டியதோர்பிச்சரிடஞ்
சொல்லிசொன்ன மயிலிபள்ளன் துயரத்தையுந் தான் [கேட்டு



புல்லறிவாளன்றனக்குப் புத்திசொல்லி விலக்கியபி
னெல்லைச்சதிராய்க்குடும்ப னேர்ப்பூட்டவே துணிந்தான்

பள்ளன் பயிர்செய்ய முயலல்.

சிந்து

அடதாளம். புன்னாகவராளி.

117. தோத்திரஞ்செய்து கபியைப் போற்றிவணங்கிக்-குடும்பன்
சொந்தமாகப் பண்ணையுழத் துணிந்து நடந்தான்
நேத்தியாய் நாத்துநட மூத்தபள்ளியும்—கபிக்கு
நேர்த்திக்கடன் செய்துமங்கே வாழ்த்தி நடந்தாள்
சாடைசொல்லியே குடும்ப னோடியேவந்து—பண்ணைத்
தனதாயுழுவேனென்று மனதினினைந்தான்
பேடைமயிற் போலொளியுங் கூடியேவந்து—கபியைப்
பேணியே மனதில்வைத்துத் தானும் நடந்தாள்
சந்தனச் சோலைதன்னை முந்தநடந்து—குடும்பன்
நாடிய காவுதனி லோடிப்புகுந்தான்
சந்தன மரத்தைவெட்டி கலப்பைசெய்து—பெரு
சாதிக்காய் மரம்பிளந்தே யேர்க்காலும் வைத்து
வேங்கைமரந் தன்னைவெட்டி நுகக்காலுஞ்செய்தே-யொரு
வில்வமர வைரத்தால் மேழிசெதுக்கி
பாங்கான பச்சைவர்ண வடத்தைச்சுற்றி—நல்ல
பத்தரை மாற்றுத்தங்கத்திற் கொழுவுஞ் சேர்த்தான்
பசும்பொன்னின் கொண்டியிட்டு முத்தக்குடும்பன்—கபி
பண்ணைதனிலேயுழுக வுன்னி நடந்தான்
வசங்காத காளையெல்லாந் தொழுத்திறந்து—விட்டு
மந்தையிற் றிரட்டியினம் வகுப்பைச் சொல்வான்
கூடுகொம்பு வெள்ளை கருமயிலை புல்லை—விரி
கொம்பனலை கொம்பன்குறல் கோட்டை மடக்கி
சோடிப்பிரியாச் சிவலை செம்மறை மோழை—வெகு

துட்டத்தனஞ் செய்புகின்ற நம்பட்டக்காளை
கட்டக்கொம்பன் போர்க்காளையை நோக்காலிற்பூட்டி-வயக்
காடுகளைத் தானுழுது கோட்டேறும்போட்டான்
வட்டமிட்டுச் சாலடித்து மூத்தக்குடும்பன்—முகம்
மது நபிபாதத்தை மனதினினைந்து
பாம்படித்துத் தானுழுது சந்தோஷமாக—நபி
பண்ணைவய னிரம்பவே தண்ணீர் வருத்தான்
விம்பவயல் தொழிலிட்டுக் குழையுமிதித்துப்—பள்ளி
நிச்சயமாய் காத்தூட நெறியுடன் வந்தாள்
காலமே சோறுசமைத்தே யிளைய பள்ளியும்—பண்ணைக்
காடுழுகுங் குடும்பனைத் தேடியேவந்தாள்
வாலவயதான பிச்சப் பண்ணைக்காருட—நல்ல
வாக்குபெற்று மூத்தபள்ளி வந்துசேர்ந்தாள்
சிறந்த மக்கம் வாழ்நபி யாண்டவர்பண்ணை—வயற்
சேர்க்கையுடன் முனுழுகச் சென்று நடந்து
விறல்நபி யாண்டவரின் பாதம் பணிந்து—விஞ்சை
வித்துவகை வேணுமென்று விண்ணப்பஞ்செய்வான்

மாடுபோய்தல் கலிப்பா.

118. உழுதிடவே பண்ணைகளை யோர்மனதாய்ப் பள்ளனுமே
தொழுத்திறந்து காளைகளைத் தூர்த்தி வெளியேகொணர்
[ந்தான்
சொழுத்தவோர் விடைமுறித்துக் கொண்டோட வதை
[மறிக்க
இழுத்தவனைப்பாயவிழுந்திரு நிலத்திற்கிடந்தானே.

மூத்தபள்ளி சொல்வது

சிந்து.

ஆதிதாளம். இ—ம். கேதாரகௌளம்.

119. அசலங்கனையுந் திண்புயதோ-போர்முகத்தி
லாயிரமியானைகளையுங் கொலும் வீர



குசலமுறி நெஞ்சுடைய பள்ளா-யெதிர்க்காமற்
குன்றை யொன்றைத்தோற்ற தென்னவின்னாய்
வசனமெந்தன் றன்னிவிடப்புருந்தா-யடிக்கடியே
மதினத்துப்பள்ளி சேர்க்கையின் மிருந்தாய்
விசனமிருவாச்சுதுன் நிலைபார்த்தே யுன்னையிப்போ
வெற்றிநபி யாட்கொள்வார் வினைதீர்த்தே

இளையபள்ளி சொல்வது.

120. மன்னடையிடியால் வருத்தப்படும்போதிற்-சுத்தசெய
வல்லவனை நோக்கி நேர்ந்திடும் போதி
லண்டர்தொழும் நாயனைமைக் காத்தானே-நேர்ச்சை
செய
அகட்டியடித்திடவே முகம் பார்த்தானே
குன்னடையென்றுங் கிப்போதவன் தோத்தானே-மூத்த
பள்ளி
குறைவாகச் சொல்லவும் பள்ளனேத்தானே
விண்டுசொல்லிற் காமவெறி தொட்டானே-மக்கம்நபிமேல்
வெகுநாளாய் பாத்தியாக்கள் விட்டானே.

பள்ளனெழுந்திருத்தல் சிந்து.

அடதாளம். இ—ம். புன்னுகவராளி.

121. மூத்தப்பள்ள னெழுந்து நடித்தான்-பள்ளி
முன்பு நின்றவன் முகத்தி லடித்தான்
குத்தியவிடைதன்னைத் தடித்தா-னேரிற்
கோதிலாக்காளைகளைத் தொடுத்தான்
கத்தக்கடையும் வாயின்மடுத்தான்-கையிற்
றுணிவோடு தார்க்கம்பை யெடுத்தான்
மற்றுமந்தன்னெதுப்பையும் விடுத்தான்-மக்க
மாநபி பண்ணைகளை யடுத்தான்.

122. பொன்னேரில் விடைகளைப் பூட்டியே-நல்ல
புலனுழுதிடக் கொழுக்கூட்டியே

கன்னேர் மிலத்தையுமுழுவான்-பருங்
கட்டிகளையிதித் தெடுத்தெழுவான்
கன்னேயமாக வொருவனையு-மக்க
நன்னுட்டையான் நபிதனையும்
என்னேரமும் பாடிப்புகழ்வான்-பள்ள
விருதயந்தனின் மிக மகிழ்வான்

123. வேளைதனிலே குடும்பன் விண்ணப்பஞ் செய்ததற்கி
ளுண்டிமை கொண்டநபி யாச்சிரியமாயுரைப்பார்
தோளமையாய் வந்தபிச்சர் தொம்பரையி னெல்லளக்க
காலக்குப்பட்டயினி நற்பயிரும் வாய்க்குமென்றார்.

களஞ்சியந் திறப்புச் சிந்து

அடதாளம். இ-ம் புன்னுகவராளி.

124. பெருநல்லா நாயனையு மக்கநபி தன்னையும்
வாழ்த்தித்தொழுதுகொண்டு பண்ணைபுருந்து
தயவாய் முகியித்தின் குத்துபாவுஞ்-சொல்லித்
தாட்டீகமாய்க் களஞ்சியப் பூட்டுத்திறந்தார்
நயமாயபூபக்கருட பாதம் பணிந்து-மிக
நாடியுமதுகந் தாவைக்கூடப்பணிந்து
பயமாயுதுமானுர்க்குப் பாத்தியாவோதி பிச்சர்
பாரமுடன் களஞ்சியம் பாங்காய்த்திறந்தார்
பத்தியலியார் பீவியைப்பணிந்து வணங்கி-நமன்
பாலாசனுசைனு் தன் பாக்கியமென்று
வெற்றி காதிர்மீரு சாய்பை விரும்பிப்பணிந்து-பிச்சர்
மேன்மையுடன் களஞ்சிய வீட்டைத்திறந்தார்
தூக்கியமாய்க்காட்டு வாவுத்துடியிபுறுகிமையுஞ்
சொக்கமுடன் சிக்கந்தரைச் சொல்லிப்பணிந்து
நித்தியமுந் நுதத்தாவையும் நபிமாரையும்-பணிந்து
நேசமுடன் களஞ்சிய வாசல்திறந்தார்



கலிதிர்க்குஞ் சேகாதி சாய்பை நினைந்தே-யதி
காரணச்சதகத்துல்லா காட்சியெனவே
பலிதமாய் மதார் சாய்பைப்பணிந்து போற்றி-பிச்சர்
பட்டரைக்களஞ்சிய வாசற்றிட்டி திறந்தார்
அலிமாமுலையுண்ட நபியாண்டவரைத் தான்றொழுது
ஆயிரம்பொன்பெற்ற மரக்கால் பிச்சர் கொடுத்தார்
பொலிபொலியென்று குடும்பன் புகழ்ந்து மண்டிகளிட்டு
பொன்மரக்காற் பாச்சிநெல்லைப் போற்றியளந்தான்
வல்லடிக்கும்பாச் சம்பாவும் வாழைப்பூச் சம்பாவிரையும்
வகைவகையாய்க் குடும்பனங்கே வாரிக்குமித்து
குல்லக்குருந்தென்ற வித்தைக்கூவிநுவாவுஞ்சொல்லிக்
கூச்சமத்து மாககாலைப் பாச்சியளந்தான்
ஈச்சிச்சம்பா ஆனைக்கொம்பன் இலுப்பைப்பூச்சம்பா-வித்து
மெண்ணித்தொகைபார்த்து பிச்சரோட்டிலெழுதி
பாக்கியமியாண்டவர்தன் பாதம்வணங்கி-குடும்பன்
பாரமெனு மரக்காலைப் பாச்சியளந்து
குழியிடிச்சான் மிளகியுங் குருவை மணல்வாரியுங்
கும்புகும்பாய்க் குவித்தங்கே யம்பாரமிட்டு
வழிவழியடிமையென்று வரிசைநபியைப்போற்றி
மகிழ்ந்தே குடும்பன் நெல்லை வாரியளந்தான்
பொருவரியன் காலன் பொசம்பன் குலவாழையன்-வாசம்
புனுகுச்சம்பாவிரையுமே போர்க்குமித்து
கூருடன் குடும்பனங்கே நபியுல்லாவைத்தொழுது
கோட்டைக்கணக்காக நெல்லைக்கூவியளந்தான்
வகைவகையாய்க்குடும்பனங்கே நெல்லளந்து—நல்ல
வர்ணமிட்டக்கூடைதனில் வாரியேவைத்தான்
தொகைதொகையா யளந்துவைத்த நெல்லைக்குடும்பன்—வெகு
சுருசுருப்பா யெடுக்கப் பள்ளியர்க்குச்சொல்வான்

அகம்மது நபிதன்னை யடிக்கடியே-போற்றி
யள்ளியெற்கூடைதன்னைப் பள்ளியர் கண்டு
முகம்மதாபியார்க்கு முழுதுமடிமை-யென்று
மூர்க்கருடன் பள்ளியருந் தூக்கிச்சுமந்தார்
அல்லாவே முகம்மதுவே முகியித்தீனே-யென்று
ஆண்டவனைத்தான்தொழுதே யனாத்துச்சொல்லி
நெற்பிரிந்து பள்ளியர் விமிஷைப்பொழுதி-லங்கே
நீதமாய் நெற்கூடைசுமந் தேகிநடந்தார்
மென்மேலுங் கூடையில்வாரி விரசுடனே-சுமந்து
வேடிக்கை நடைநடந்து மேலவயலில்
உண்மையுடன் பண்ணைவயலுழுது விதைப்புச்-செய்ய
வுகந்து பள்ளியரங்கே யோடிச்சுமந்தார்
அல்லாஹுவை அருளொன்றடிக்கடியே-தொழுது
ஆதிநபியாண்டவர்க்கே யடிமையென்று
சல்லாபமாய்ப் பள்ளியர்களித்து நெல்லைச்-சுமந்து
தாமரைக்கண்மாய்வயலைத் தாவிநடந்தார்.

கலிப்பா.

125. வஞ்சியிருபெரு மாருமநெற்சுமக்க
அஞ்சியே மக்கநபி யாண்டவரைத்தான்போற்றி
புஞ்செயலே தஞ்சமென் றல்லாசமாய்க்குடும்பன்
மிஞ்சியே பண்ணைவயல் விதைக்கவுந் துணிந்தானே.

விதைப்புச் சிந்து.

அடதாளம். இ-ம். கேதாரகௌளம்.

126. செல்லுஞ்சிலவிற் கணக்கொப்பத்துடன்
நெல்லின்வகை யளந்துமே
திட்டஞ்செலுத் தும்மாண்டவருடசட்டப்படிக்குகுடும்பனும்
அல்லும் பகலும்பண்ணைவயலைவல்லமையுடனுழுதுமே



அஞ்சிப்பயந்துபிச்சரிடத்திற்கெஞ்சியேதுவணங்கிறன்
கல்லுருகியகானற்கடந்துமேல்லைச்சரியாய்க்குறித்துமே
காலாகாலத்தில் விதைப்பு செய்திட வாலோசிதையு மன
[ப்பிட்டான்
தொல்லுலகாளுமாண்டவரிருகுல் சபியுடவருதியாய்த்
துணைபெருக்கியே குடும்பனும் நெல்லைத் தொகுப்பா
[யளந்து வகுப்பிட்டான்

127. கூறுமிழமி யிக்கிச்சம்பா வானைக்கொம்பன் வல்லடி குப்
[பைச்சம்பா
குருவன் வத்தலக்குண்டுச் சம்பா கருங்குருவை யிராங்க
[ற்செந்தாழை
இருமையுள்ள ராசவெள்ளை செஞ்சம்பா வாழைப்பூச்
[சம்பாவும்
சித்திரக்காலி சீரிச்சம்பா மிருகிக்கன்னி மணல்வாரியும்
போருவரியன் பொசம்பனுவாைப்பூச்சம்பா வாலன்விராக்
[கம்பன்
புனுகுச்சம்பா மட்டவெள்ளை மிளப்பைப்பூச்சம்பா
[கட்டைவெள்ளையுடன்
மிளிவிளை சீரகச்சம்பா முத்துவெள்ளைக் குருவைக் குழி
[யடிச்சான்
வெந்தயச்சம்பா குன்றாழை மொட்டைவெள்ளைக்
[காடைக்கழுத்தானும்
பெருவகையாய்ப் பிரித்து விரையைப் பெருக்கமாய்ப் பண்
[ணை வயலெங்கும்
மெச்சவருதிப்படியே குடும்பன் மிச்சமாய் வயல்விதைத்
[திட்டான்

128. தாவியே முத்தக்குடும்பனும் மிச்சரேவியபடி வயலெங்கும்
தனித்துழுது தொழிவிட்டு வொருக்ஷணப்பொழுதினில்
[விதைத்திட்டான்
ஆவிப்பற்றுச்சினந்துமே பண்ணைக்கேகியுழுதுதொழிவிட்டு
ஆண்டவர் சபியை வெங்கும்வர் தன்பாய்க் குடும்பன்
[விதைத்திட்டான்

மேவிய பண்ணைவயலிற் குடும்பன் கூவியுழுதுசொரிபிட்டு
விருப்பமாக மகிழ்ச்சியாய் வெகு பெருக்கமாய்நெல்லை
[விதைத்திட்டான்]
காவியத்துடன்வேத முழுதும் காவிற்றுதித்துக்குடும்பனும்
கவிமாவுகந்த நபியைவணங்கிப் பொலி பெருகவே
[விதைத்திட்டதுன்

கலிப்பா.

129. வேகமாய்ப்பண்ணைவயல் விதைத்துக்கவேபூத்
தாகமாய்ப்பள்ளியிடஞ் சாப்பிட்டானே குடும்பன்
ஏகவெளிமார்க்கத்திலே பெண்பிராணுதி நபி
பாகம்பயிர்பார்க்கப் பவனிவலம் வந்தாரே.

முகம்மதுநபி பவனிவரவுச் சிந்து.

130. மன்னர் மன்னர் புகழ்ந்திடும் மக்கமதினதிருந்து
வரிசையுடன் வாரதிவரார்காண்
அன்னமுமாடையுந்தந்தேயடியேனை ரட்சித்தவ
ராதிநபியாண்டவருந்தான் பெண்ணே
சந்தனஞ் சவ்வாதுமணம் சாம்பிராணி வாசமுடன்
சந்தோஷமாக வாரதார்காண்
சொர்க்கமுடன் வந்துமெந்தன் துன்பங்களைத் தீர்த்தவொரு
சோதிநபியாண்டவருந்தான் பெண்ணே
அல்லும் பகலுமெங்கு மந்திவரைப் பணிய
அதட்டியதட்டி வாரதார்காண்.
செல்வமுடன் பக்தர்களின் தீவினைகள் தீர்த்தவொரு
சிங்காரமான நபிதான் பெண்ணே
திந்திமத்தளமுழங்கத் திவெட்டிகள் சூழ்ந்துவர
சிறப்புடனே வாரதிவரார்காண்
எத்திசையிலுள்ள இசுலாமான பேரைக்காக்கு
மிரசூல் நபியாண்டவர்தான் பெண்ணே
பாவாடை வீசிவரப் பல்லக்கின் மேலிருந்து
பவுசுடன் வாரதிவரார்காண்



தேவாதி தேவர்களுஞ் சிறப்புடனே தான்பணியச்
செல்வந்தருமாதி நபிதான் பெண்ணே
பக்கிரிகள் தான்பணியப் பட்டாவரிசையுடன்
பாவனையாய் வாரதிவரார்காண்
மிக்கமுடன் பூமியிலே வேதுவினை வாராமல்
மென்மேலுங் காக்குநபிதான் பெண்ணே
தங்கத்தாற் சாப்பளியுந் தாயித்து மோதிரமுடன்
சல்லாவுடுத்தி வாரதார்காண்
பொங்கமுடனே மகிழ்ந்து போற்றியவரைப்பணிந்தாற்
புத்திரர் கொடுக்கும் நபிதான் பெண்ணே
தம்பூர் வீணைமுழங்கத் தாசியர்களாடி வரச்
சங்கையாய் வாரதிவரார்காண்
நம்பினபேருக்கு நித்தம் காச்சாக்கொடுத்தருளும்
நபியிரசூலாண்டவருந்தான் பெண்ணே
ஆலிம்களுஞ் சூழ்ந்துவர ஆகாசவாணமிட
ஆனையின்மேலேறி வாரதார்காண்
சீலமுடன் வந்துமெந்தன் தீவினைகள் தீர்த்தருளுஞ்
சிங்காரமான நபிதான் பெண்ணே
முல்லையிருவாட்சியுடன் முத்துச்சரந்தான்றுலங்க
முழக்கத்துடன் வாரதிவரார்காண்
அல்லும் பகலுமவரை யன்புடனே பணிந்தவர்க்கு
அருள்தருமாதிநபிதான் பெண்ணே
தண்டைச்சிலம்பிலங்கச் சங்குமணித்தான்றுலங்கத்
தாட்டீகமாய் வாரதிவரார்காண்
மண்டலத்திலுண்டான மானிடரைக் காத்துமெங்கள்
வல்வினைகள் தீர்த்தநபிதான் பெண்ணே
குலவை முழக்கத்துடன் கூறுனிதான்பணியக்
குதிரையிலேறி வாரதார்காண்

மலையாதே யென்றுசொல்லி வல்வினைகள் தீர்த்தருளும்
வரிசைசகதி யாண்டவருந்தான் பெண்ணே
வேதங்கள் முழுங்கின வெஞ்சாமகத்தான் வீச
விச்சையுடன் வாரிவைசாக்கான்
பூதலத்தையாண்டுவெரு புண்ணியங்கள் பெற்றுசெரு
பொன்னூருஞ் சவரிமுகதிதான் பெண்ணே
மங்கைசோனை காசியினை வளர்த்துப்பிரியமுடன்
மைச்சினையாய் வாரிவைசாக்கான்
சங்கையுடனொக்கலையுங் காக்கசாத்து செட்டித்தவர்
சாய்புகதி யாண்டவருந்தான் பெண்ணே

கலிப்பா.

131. ஜெயமான ஆதிகதி சிறக்கிலகே வந்துனை
வயமாகப் பள்ளியர்கள் வந்து பணிந்தாரே
நயமான வுத்திரவைச் சொல்லியவரே பெயின்
கயமாகவே காத்துவிதை செய்யத் துணிந்தரே.

நாத்து நடவு சிந்து.

அடதாளம். இ—ம். கல்யாணி.

132. வாய்த்தசென்றுநின்று பள்ளிதிருபேரும்
வாய்கொண்டு கூவிக் குலவைமுழக்கி
நாத்துமுடியைக்கையி லெடுத்து மங்கை
சாயனைவாழ்த்தி நடுவையுஞ்செய்தார்
யாருகல் தபியைவணங்கி நாத்து
யாக்கனை வாழ்த்திக் குலவைமுழக்கி
பேரணியாக நாத்துப்பிடுங்கிவேருப்
பிரித்துவயலில் நடுவையுஞ்செய்தார்
ஆடிப்பாடி மகிழ்ந்து முகிழித்து
நூண்டவர் போற்றக் குலவைமுழக்கிக்
கூடிப்பள்ளியர் நாத்துப்பிடுங்கிக்
குளிர்ந்து வயலில் நடுவையுஞ்செய்தார்



கம்பீரனென் றனிக்கும்பீவி
சாகியாருக்குங் குலவைமுழக்கி
தெம்பிலே நாத்துப்பிடுங்கிப் பள்ளியர்கள்
சிங்காரமாக நடுவையுஞ்செய்தார்
பேருபெற்ற அசனுசைனுசைப்
பிரியமாய் வாழ்த்திக் குலவைமுழக்கி
திருடனே பள்ளியர் நாத்துப்பிடுங்கி மிக
விரும்பி வயலில் நடுவையுஞ் செய்தார்
காசைவாழும் பெருங் காதிர்பீருவை
கலந்துசொல்லி வாழ்த்திக் குலவை முழக்கி
பாகவயலில் நாத்துப்பிடுங்கியதைப்
பகுந்து வயலில் நடுவையுஞ்செய்தார்
[illegible]
நயந்துவணங்கிக் குலவை முழக்கி
ஆங்காரமாக நாத்துப்பிடுங்கியதை
யழகாய் வயலில் நடுவையுஞ் செய்தார்
சந்தோஷத்துடன் பெக்கர் சாய்பைச்
சலாஞ்சொல்லி வாழ்த்தி குலவைமுழக்கி
அந்தரமாகவே பள்ளியர் நாத்துப்பிடுங்கி
யலங்காரமாக நடுவையுஞ்செய்தார்
சேகாதி சாய்பு தன்னைவணங்கிச்
சலாஞ்செப்பி வாழ்த்திக் குலவை முழக்கி
காசைப்பள்ளியர் நாத்துப்பிடுங்கி
வகுப்பாய் வயலில் நடுவையுஞ்செய்தார்
சகத்துல்லா பாதுஷன்னை வணங்கிச்
சலாஞ்சொல்லி வாழ்த்திக் குலவைமுழக்கி
பதனமாய்ப் பள்ளியர் நாத்துப்பிடுங்கி
பகுந்துவயலில் நடுவையுஞ்செய்தார்
மாலைகச் சுறுத்தான் சாகிபைப்போற்றி
வருத்தியே வாழ்த்திக் குலவைமுழக்கி

மேலச்சப்பள்ளியர் நாத்துப்பிடுங்கி
விரும்பிவயலில் நடுவையுஞ்செய்தார்
இசுமாயில் நபியார் தன்னைவணங்கி
யிணக்கமாய் வாழ்த்திக் குலவைமுழக்கி
பசுமையுள்ள நாத்துப்பிடுங்கி நல்ல
பண்ணைவயல்கள் நடுவையுஞ்செய்தார்
செயினுருடைய பாதம் வணங்கி
நெறியுடன் வாழ்த்திக் குலவைமுழக்கி —
குயிற்போல்மொழியும் பள்ளியரும்
குனிந்து வயலில் நடுவையுஞ்செய்தார்
மதாறு சாகிபு தன்னைவணங்கி
வருந்தியே வாழ்த்திக் குலவைமுழக்கி
இதமாய் வயலில் நாத்துப்பிடுங்கியே
யிங்கிதமாக நடுவையுஞ்செய்தார்
இவ்விதமாகவே பள்ளியர் கூடி
யிங்கிதமாகவே குலவைமுழக்கி
எவ்விதமுமெங்கள் பிணிகள் தீர்க்கும்
மிருகுலல்லா வயல்கள் நடுவையுஞ்செய்தார்

கலிப்பா.

133. நடுவைசெய்து பள்ளியர்கள் நஞ்சை வரப்புகளில்
சடவாரவேயனுப்பாய்த் தனித்திருந்தாரப்போது
அடவுடனே தான்குடும்பன் ஆதிநபியை வணங்கி
மடைதிறந்து தண்ணீரை வயல்தோறும் வருத்தானே.

சிந்து.

அடதாளம் இ-ம் புன்னாகவராளி.

134. நாயன்தனைப்பணிந்து-பள்ளன்-நடந்தான் குளத்தோரமாயு
பாயத்துடன் மடையைத்-திறந்து-பாயத்தண்ணீர்வருத்
தான்



குருவாகிய நபிபாதத்தைக் குடும்பன் மிகவேவணங்கி
தருணமலே வயல்தோறுந் தத்தளிக்கத் தண்ணீர் வருத்
தான்
சாலமுள்ள குடும்பன்-மெள்ளச்-சன்ன நடைநடந்து
ஓலைப்பத்து வாய்க்கால்-தன்னை-வெட்டித்தண்ணீர்வரு
த்தான்
களிந்து முத்தக்குடும்பன்-வயல்-கடந்தேயப்பால்நடந்து
குனிந்துகொண்டு மண்வெட்டியாற் கொத்தித் தண்ணீர்
வருத்தான்
நால்கணப்பங்கானவனும் நானே நபியுடைமையென்று
மானுங்கணக்காக வயலில்வந்து தண்ணீர்வருத்தான்
புகழாய் முத்தக்குடும்பன்-நபி-பொற்பாதத்தை வணங்கியவர்
மகளாம் பீவி பாத்திமாவையும் வாழ்த்தித் தண்ணீர்வருத்
தான்
எட்டிநடந்தோடித்-தண்ணீ-ரொதுக்குதென்றுமே குடும்பன்
வெட்டிமறுவயலிற்-பாய-விலகித் தண்ணீர்வருத்தான்
களைகள் களப்போக்குகளைக்கண்டு பள்ளனுமகிழ்ந்து
இருகுல் நபிபண்ணை வயலெங்கும் தண்ணீர்வருத்தான்.

கலிப்பா.

135. தந்திரமாகக்குடும்பன் தண்ணீர் வருத்தபின்பு
முந்தியே சோறுகொண்டு மூத்தபள்ளிதான்கொடுத்தாள்
மந்திரியாம் பிச்சருட வார்த்தைமிகக் கேளாமல்
உக்கிரமோ சமத்தியென்று வொளிவு சண்டைசெய்தானே

பள்ளியரிருவருக்கும் சண்டைச்சிந்து.

ஆதிதாளம்—இ-ம். காம்போதி.

136. கேட்டியே மயிலியடி மக்கத்துப்பள்ளி-சிக்கிக்
கேவலமோ நானுனக்கு மக்கத்துப்பள்ளி
அட்டியென்னடிமொளியே மதினத்துப்பள்ளி-சிக்கி
ஆதரியலந்தாயடி மதினத்துப்பள்ளி

எத்துவாய்ப்பள்ளி மயிலி மக்கத்துப்பள்ளி-சிக்கி
யேதடிபுறவுமினி மக்கத்துப்பள்ளி
தொந்திலேவந்தாய் வொளிவே மதினத்துப்பள்ளி-பள்ளன்
சொந்தமோ வுனக்குமட்டும் மதினத்துப்பள்ளி
ஆமடிச்மத்தி மயிலி மக்கத்துப்பள்ளி-சிக்கி
யார்சொன்ன புத்தியடி மக்கத்துப்பள்ளி
ஓமலிப்பேனடி யொளிவே மதினத்துப்பள்ளி-சிக்கி
யுனக்குப்பேசவாயுமுண்டோ மதினத்துப்பள்ளி
தக்கபடி புத்திசொல்வேன் மக்கத்துப்பள்ளி-சிக்கி
நாட்டகமாய்ப் பேசாதடி மக்கத்துப்பள்ளி
சக்களத்தியேயொளிவே மதினத்துப்பள்ளி-சிக்கி
சாடைகண்டு விலகிக்கொள்வாய் மதினத்துப்பள்ளி
வெட்கமில்லையேமயிலி மக்கத்துப்பள்ளி-சிக்கி
மேட்டிமைகள் பேசாதடி மக்கத்துப்பள்ளி
ஏக்கிறுயென்னடியொளிவே மதினத்துப்பள்ளி-சிக்கி
யென்னடி பகட்டுகிறாய் மதினத்துப்பள்ளி
சிக்கியென்றுயே மயிலி மக்கத்துப்பள்ளி-ரெம்பச்
சீரழிந்து போகாதடி மக்கத்துப்பள்ளி
எக்கிப்பேசுறு யொளிவே மதினத்துப்பள்ளி-சிக்கி
யெப்பொருளுங் கைக்கொண்டாயே மதினத்துப்பள்ளி
வாயிடும்பேனடி மயிலி மக்கத்துப்பள்ளி-யொப்பன்
வாழ்க்கையை கானறியேனு மக்கத்துப்பள்ளி
தாயிதிக்காரியே யொளிவே மதினத்துப்பள்ளி-புள்
தக்கைதாய் வாழ்க்கை யென்ன மதினத்துப்பள்ளி
ஏசிப்போயே மயிலி மக்கத்துப்பள்ளி-சிக்கிச்
சனத்திலேயுன்மயிர்பிடிப்பேன் மக்கத்துப்பள்ளி
பரியாசமோ என்னடிவொளிவே மதினத்துப்பள்ளி-சிக்கிப்
பல்லுதிரவே யடிப்பேன் மதினத்துப்பள்ளி
சூர்க்கமென்னடி மயிலி மக்கத்துப்பள்ளி-சிக்கி
மூர்க்கியென் சோறுகொடுத்தாய் மக்கத்துப்பள்ளி



நிர்க்கமில்லையோவொளிவே மதினத்துப்பள்ளி-பிச்சர்
செய்திமையதிக்கிலேயே மதினத்துபபள்ளி
வெற்றியுடன் சண்டைசெய்த பள்ளியரையும்-பிச்சர்
முத்தக்குடும்பனையும் வேகமாய்ப்பார்த்தார்
இத்தனை சண்டையிடுகிறீர் முத்தக்குடும்பா-நா
னிருக்கிறேனென்றும் பாராமல் முத்தக்குடும்பா
தஞ்சமென்றேம் நாங்களுந்தான் பண்ணையாண்டே-யிவிக்
தர்க்கார்த்தருளும் சாய்பே பண்ணையாண்டே
வஞ்சகஞ் செய்வதில்லை பண்ணையாண்டே-நாங்கள்
வாழ்ந்திருப்போ மொற்றுமையாய் பண்ணையாண்டே
அச்சரம்பிசகவில்லை பண்ணையாண்டே-நபி
யாண்டவர்க்குச் சொந்தமிமை பண்ணையாண்டே
கெச்சிதமாய்ப் பண்ணையயுற் கதிறுக்கவிப்போ
கிள்ளாக்கைத்தாரும் சாய்பே பண்ணையாண்டே.

வெண்பா.

137. பார்காத்த ஆதிநபிப் பண்ணைவயலத்தனையும்
சீர்பூத்துக்கதிர் விளைந்து நிலத்திற். சரிந்ததுவே
பார்த்துப் பிச்சருமே குடும்பனிடஞ் சொல்லியபின்
காக்கத்தப் பள்ளியர்கள் கதிறுக்கவே துணிந்தார்.

கதிறப்பு தொங்கற்சிந்து.

ஆதிதாளம் இ-ம். காட்டை.

138. குறையாத செல்வங்கடருங்
குதாவைப்போற்றித் தொழுதயிக
கரையிற் பாதம்பட நபி
தன்னையும் போற்றி வணங்கியபின்
மந்த்ரங்கொடுத்தாருங்குரு
மையதீனாண்டவரைப்பணிந்தே
மத்தாப்பெரும்புவியான
அவியார் பீவியையும் வணங்கி

ஆதாரம் நீயெனவே யென்று
    அசனுமைசனுரைத்தான்பணிந்து
காதிருமீரு சாய்பை நிதங்
    காத்திடுமென்று மிகவணங்கி
இதுவே சமயமென்றுவங்கே
    யிருபேருங்கூடி வணங்கியபின்
பொதுவிற் சலாமுங் கொடுத்துமங்கே
    புகுந்து வயலிற் கதிரறுத்தார்
புவனத்தில் வெற்றிதரு நபி
    போற்பாதமிக வணங்கியபின்
தவனங்கொண்டு பள்ளியர்கள்
    தயக்கமின்றிக் கதிரறுத்தார்
நயவாகவே குடும்பன் பள்ளிச்
    சன்னையடித்து மனந்துணிந்து
வயற்புகுந்தங்கே பிச்சர்
    வாக்குப்படியே கதிரறுத்தார்
பள்ளிகளிருபேரும் நபிப்
    பண்ணை தனக்குத் தனதெனவே
புள்ளிவகுப்பாக வங்கே
    புகுந்து வயலிற் கதிரறுத்தார்
குண்டு வயலில் நெற்கதிர்கள்
    குறைவின்றி விளையுமிதம்பார்த்து
வண்டார் குழலியரங்கே
    வந்து வயலிற் கதிரறுத்தார்
பயிக்கை நமக்கு வருமென்று
    பள்ளியிருவர் தான் மகிழ்ந்து
துடுக்காயெல்லோருங் கட்டைத்
    தூக்கிச் சுமந்து களத்தில்வைத்தார்
நடந்தார் வரம்போரம் பிச்சர்
    கந்தாளையாகக் காத்திருந்தார்



நடந்தாரிருபேருங் கட்டை
    நாடியெடுத்துக் களத்தில் வைத்தார்
குவித்தார்கள் பள்ளியரங்கே
    கும்ப கும்பலாய்ப்பிரித்துவைத்தார்
தவிப்பாரியே குடும்பன் கையைத்
    தாங்கிப்பிடித்துத் தழுக்கடித்தான்
மங்கையரிருபேருங்கட்டை
    வாரியெடுத்துக் களத்தில்வைத்தார்
செங்கையினுற் குடும்பனள்ளிச்
    சேர்த்துப்பிடித்துத் தழுக்கடித்தான்
பாராட்டி பள்ளியர் கட்டைப்
    பரப்பியந்தக் களத்தில்வைக்க
சீராட்டியே குடும்பன் கட்டைச்
    சேர்த்துப் பிடித்துத் தழுக்கடித்தான்
துலையாக் கட்டைப்பள்ளியர்கள்
    தூக்கிச் சுமந்து களத்தில்வைத்து
மலைபோலெழுப்பிச் சேர்த்துக் கையால்
    வாரிக்குடும்பன் தழுக்கடித்தான்
திரத்தின் முத்தக்குடும்பனங்கே
    சேகரமாகப் பொலிதூற்ற
முரத்திலே யெங்களுக்காரு
    முகம்மதே யென்று சலாங்கொடுத்து
சிதரிக்களந்தனிலே பள்ளன்
    செந்தூட்பறக்கத் தூற்றிவிட்டான்
பகரியேதான் குடும்பன் பிச்சர்ப்
    பண்ணை யாக்கினைக்குப் பயந்து
மைவிழி மாதுகளும் நெல்லை
    வாரிக்கொடுக்கத் தான்தாங்கி
கைவிரசாய்க்குடும்பன் நெல்லைக்
    களந்தனிலே பொலி தூற்றிவிட்டான்

ஏணக்கரச்சுதென சொல்லி நெல்லை
யிருபெரும் வாங்கித் தான்கொடுக்க
கணக்கவேதான் குடும்பன்வாங்கிக்
களத்தனிலே பொலி தூக்கிவிட்டான்
முறைபாய்ப் பிச்சரங்கே வந்து
முத்திரையிட்டுக் களத்தனிலே
அம்பாரமாகக் குவித்தநபி
யாண்டவருட வருதிப்படி
ஆடம்பரமாக வென்னை
யாளுநபியே யென்றுசொல்லி
கோடான கோடி நெல்லையவன்
கோட்டைக்கணக்கா யளந்துவிட்டான்
வன்பானவன் குடும்பனங்கே
மண்டியிட்டு மரக்காற் பாத்தி
யொன்பது கூத்தன்றனக்குமுள்ள
சுதந்தரத்தையுந் தான்கொடுத்து
அகதி பரதேசிகட்கு
மங்குவருஞ் சுதந்தருக்கும்
தருதியாய் வந்தவர்க்கெல்லாந்
சலியாமல் நெல்லை யளந்துவிட்டான்
பங்காய்ப்பாதி நெல் நாயனுக்குப்
பாத்தியாவோத வளந்துவிட்டான்
கங்காண பிச்சர்முன் மற்றநெல்லைக்
களஞ்சியத்தனிலே சேர்த்துவிட்டான்
ஓதிதுவாவுஞ் சொல்லிவெகு
வல்லாசமாய்க் குடும்பன் மகிழ்ந்து
நீதிநபி பாதந்தன்னை
யாதரவாகத் தொழுது நின்றான்.



கலிப்பா.

139. கதிராறப்புங் குடிப்புங் கருத்தாய் நடத்தநபி
அதிபொலிகளானபல வளந்தவனுங் கணக்கிட்டான்
அதிமக்க நபியன்னை துலங்க கணக்குரையாலே
முதியுடனே விபரமதாய் வழக்குவான் பள்ளனுமே.

கணக்குரைத்தல் சிந்து.

அடதாளம். இ-ம் சங்கராபரணம்.

140. அதிமக்க நபியின் கிருபைகொண்
டாறுகோடியு மெண்பத்து நான்கு நா
லாயிரத்தெழுநூறுஞ் சொச்சங்கோட்டை
யானநெல்லில் வல்லாண்டவன் பேருக்குப்
பாதியைப் பாத்தியாவுங்களத்திலிப்
பாதியில் நன்னபியைப் புகழும்
பாவலர்க்குமளந்து கொடுத்தநெல்
பத்துலெட்சத் திராயிரங்கோட்டை
ஏதுமற்ற அகதிபரதேசி
யெழியவர்கட்கு மென்னூறிரங்கோட்டை
ஏர்ச்சுதந்தரக் கம்மாளர் தங்கட்கு
மெழுபதாயிரங் கோட்டையளந்தேன்
கோதிலா நற்புலவர்களுழுதநங்
குடும்பர்க்கெழு நூறாயிரங் கோட்டை
குளம்பழுதுகள் பார்த்த வகையிலுங்
கூலிக்காயிரங் கோட்டையுண்டாண்டே.

141. மக்கநன்னகரில் விளங்கும் பள்ளி
வாசன்முன்புத் திருப்பணிச்செய்யவும்
மற்றும் வேலைக்கும் பத்துலெட்சங் கோட்டை
வாரிநெல்லை யளந்து கொடுத்தினுங்
தக்கநன்புகழ் ஹாஜிகள் தங்கிடுஞ்
சத்திரத்தின் தருமச்செலவுக்கு

சரியா யொழுதாறுயிரங்கோட்டை
தண்ணீர்ப்பந்தலுக் காயிரங்கோட்டை
பக்கத்தில் நிற்குங் காவல்காரருக்குப்
பதினொன்றாயிரங் கோட்டையளந்தேன்.
பற்திவாழுங்குடிக் காணியாளரின்
பதிவுங்காயிரங் கோட்டையளந்தேன்
ஹக்கஅ்பேர்சொல்லி வித்துக்கு வேறுநெல்
லளந்துவைத்தே னாறுயிரங்கோட்டை
ஆகமற்றநெல் களஞ்சியஞ்சேர்த்தே
னறிந்துகொள்ளுமென் கணக்கையுமாண்டே.

கலிப்பா.

142 மதிவாக பிச்சமதின் வகைகேட்கவே குடும்ப
னாதிகமொரு கோடிக்குமே லாயிரத்திச்சொச்சமென்றான்
பதிவாகவெல்லோர்க்கும் பாக்கியங்கள் தந்துபோல்
கெதிமோட்சக்தாருமென்று கிருபைநபியைப்பணிந்தார்.

சிந்து

அடதாளம் இ-ம். மோகனம்.

43. ஆதிகுருவானநபி-பாத-மனுதினமும் நாமறவோம்
ஏதுகுறைவந்தாலும்-பொறுத்-தென்னைக்காப்பாயிரசூல்-நபியே
ஒப்பனையாகக் காட்சிதந்து-இரு-வொளிவான நபியிரசூலே
சொற்பனத்தில் புதுமைகளாய்-நிதந்-தோற்றுவிராதி நபியே
புத்திவித்தையுங் கொடுத்து-மிந்தப் பூதலத்தையாண்டநபியே
வெற்றியுடன் கண்காட்சி-தந்து-வினைதீர்க்குமாதி நபியே
பொறுமையாக எத்தேசமுங்-காத்துப்-பொன்னாஞ்சலாடு நபியே
உரிமையுடன் வந்தவரை-நித-முண்மையாகக்காக்கும் நபியே



வரந்தருவீரென்றும்மை-நாளும்-வாழ்த்திமிகப்போற்றினேலே
பரமுனக்கு நானேயென்று-முகம்-பார்த்துரெட்சித் தாளு நபியே
காட்சிதந்தென்றனுமடிமை-தனைக்-கண்பார்ப்பாயாதிநபியே
தாட்சியில்லாமலெனக்குக்-கிருபை-சாய்பு தரவேணுமய்யா
நற்புரவி தன்னிலேறி-வரும்-நபியிரசூலாண்டவரே
கற்புடைய நாச்சியார்க்கு-மெத்தக்-கனவரிசைதந்தநபியே
ஆதரவும் நீரே யெனக்-கென்னை-யடிமைகொள்வாயாதி [நபியே
போதரவாய்ப்புவிதனிலே-மிகப் புதுமையுள்ள ஆண்ட [வரே
மங்காதசெல்வந்தரும்-வெகு-வரிசையுள்ளஆண்டவரே
எங்கள்குலந் தர்க்கார்க்கு-மிரசூல் நபியேயாண்டவரே.

கலிப்பா.

144. இரசூல் நபிபாதமென்றுமே பணிந்தோம்
வரம்பெற முகம்மதுவே வாக்கருளவேணுமென்றார்
உரமுடனே யாண்டவரு முறுதியாயருள்செய்து
திரமுடனேயெல்லோருஞ் செல்வங்கள் பெற்றாரே.

தோங்கல் சிந்து.

145. விண்ணிறொளிவாய் நின்றவனே
மேலாமல்லாவொருத்தனுமே
எண்ணிப்படைத்த அகம்மதுவை
யெனையாட்கொண்ட முகம்மதுவை
மின்னிறொளிவை முத்தொளிவை
விளக்கிறொளிவை மயிலினத்தை
என்னேரமுமெகின்மரமா
யிருந்தேயண்டங்காத்திருந்த

அன்றோரவர்க்குத் தோழராய்
அபுபக்கரு மறுகத்தாபும்
அவர்க்குப்பி னுதுமான் சாய்பும்
அலியாரும் நால்பேர்களுமே
கண்ணிமைபோல் காத்திருந்து
காலம்வெகுநாள் கடந்தபின்பு
மண்ணிலத்தில் நபியெனவே
வகுத்தான் நாயன் வகுத்தானே.

146. சோதிமயமாய்ச் சுடரொளிவாய்த்
துல்குருபியார் போரென
நீதியுடனே யுலகெல்லாம்
நெறியாய்ப்பணிந்தால் காத்திடுவார்
வீதிவலமே பவனிவரும்
விரிதாம் பச்சைக்குதிரையின்மேல்
சாதிமார்கள் கவரிதனைச்
சதிராய்வீசி யெதிராய்வர
கோதிலாத நாயனல்லா
கொலுவினருகே காத்திருப்பார்
ஆதிமுதலவர் புதுமைகளை
யறிந்துசொல்வதரிதரிதே
தீதில்லா நேத்திக்கடன்கொடுத்து
செல்வத்துடனே தான்பணிந்தால்
தீன்முகியித்தினாண்டவருந்
தினமுங்காப்பாரெங்களையே.

147. மாதுநாச்சியார் பெற்றெடுத்து
வளர்த்த அலியார் மகவெனவே
வாதும்வுலி நாயனிடம்
வரமும்பெற்றாரிருவருமே



கோதுகுறைகளில்லாமல்
குருவாம்நபியார் மூறிதுபெற
கொஞ்சவபது மழகுடைய
குழந்தையசனுமுசைனுமே
பாதுகாப்பார் பகைகள் தனைப்
பஞ்சாய்ப்பரத்தியஞ்சனுடன்
பாதம் பணிந்தே யனுதினமும்
பண்பாய்ப்பணியப் பலன்றருவாரெப்
போதுமவரைச் சொந்தமென்று
புகழ்ந்து நேத்திக்கடன்கொடுத்தால்
பொங்கமுடனே மனமிரங்கி
புரிவாருளும் வாழியவே.

148. சேகம்படைத்த அல்லாவைச் சிராய் நிதப்போற்றி
அகம்மதுமேற் பள்ளுவைத்தேயவர் மலரடிபணிந்தேன்
சுகம்பெற நன்னபிபொருட்டாற் சொந்தடிமையெந்தன் [மேற்
பகலிரவாய் நாயனுமே பட்சம்வைத்துக்காப்பானே.

## கடவுளைப் போற்றல்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

149. ஆதியே போற்றிபோற்றி யமலனே போற்றிபோற்றி
சோதியே சுயம்பேபோற்றி துய்யனேபோற்றிபோற்றி
நீதியே நிராமயமே நிமலனே யேகஞான
வீதியேபோற்றி நின்னை வேண்டினேம் காப்பாய்போற்றி.

150. அண்டங்கள் படைத்தாய்போற்றி யனாதியாய் நின்றாய் போற்றி
பண்டங்கள் காப்பாய்போற்றி பகவனே பரமேபோற்றி
தொண்டர்க்குன்னருளையீந்து சொந்தமாய்க்காப்பாய் போற்றி
மண்டலந்தன்னிலெம்மை வரமளித்தாளாய்போற்றி,

## நபியைப் போற்றல்.

கட்டளைக்கலித்துறை.

151. அருளோங்கும் பண்பொழி காவோங்கு மக்கா அகம்மது
[வே
தெருளோங்குந் தீனையிவ ணிலையோங்கமை தேசிகனே
மருளோங்கு மென்னகமெய்ப்புழிவோங்க மறுமையினிற்
கருளோங்கும் வெம்மெரிவாய் புகுதாதருள் காவலனே.

152. எனையாளு மக்கத்து நன்னபியே புனையென்றும் நம்பி
நினையாத காளல்ல நீயறிவா யினி நேர்மையுடன்
மனையாளு மக்களுஞ் சுற்றமுஞ் செல்வமும் வாழவின்
[னும்
வினையாதும் போக்கியு மெஞ்ஞான மீய்ந்தருள் வெற்றிம
[னே.

பொது.

153. காவோங்கு மக்கமுகம்மதுவா மவர்கள் கிழையோர்
மாவோங்குங் குத்துபுகள் பெரியோர்கள் மலர்ப்பதத்
[தைப்
பாவோங்க நற்பொருள் நல்லிசையோங்கநற் பண்ணமை
[த்துக்
[illegible]ப் பாடிப்புகழ்வோர்களுக்கோர் குறைவில்
[லையே.

116418

வாழி

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

154. மூவாதமுதலவனின் திருவருளோமிதம் வாழி முத்திவீடா
மாவாமுக்திருமக்கா முகம்மதுவுமவர்கிளையும்வாழிவாழி
பாவாலே அகம்மதுான் னபிமீதி லுரைத்தமக்காப்பள்
[ளுவாழி
தாவாத கிதியோங்கும் படிப்போர்க்குங் கேட்போர்க்குந்
[தானே வாழி.

திருமக்காப்பள்ளு

முற்றுப்பெற்றது.